# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் இதழ் 25 நவம்பர் 05 - டிசம்பர் 05 ISSN 1474 - 8770

1997ல் நிறுவப்பட்ட
தேசம் சஞ்சிகையின்
இதழ்
**25**
உங்கள் ஆதரவுக்கு நன்றி !

பேரழிவு ஆயுதம்
AIDS : Made in America




பிரபாவின் உரையும்
இலங்கை அரசியலும்



## International aid for Tsunami Reconstruction
### Donor Commitment

| உதவும் நாடு | உறுதியளிக்கப்பட்ட தொகை $ | பயன்படுத்தப்பட்ட தொகை $ |
|---|---|---|
| Germany | 114,827,071 | 54,043,583 |
| IFRC | 255,475,478 | 28,738,242 |
| UK | 1,926,010 | 1,926,010 |
| UNICEF | 136,000,000 | 74,940,201 |
| .............. | .............. | .............. |
| .............. | .............. | .............. |

# ஊழல்

Sri Kanaga Thurgai Amman Temple SKTAT

Account Overview On : 3rd November 2005

| Account name | Balance |
|---|---|
| SKTAT TRUST . CURRENT ACCOUNT | £92,213.51 CR |
| SKTAT Trust - SPONSOR A CHILD | £31,849.78 CR |
| SKTAT TRUST . Tsunami Disaster Relief | £19,909.80 CR |

சாமி வரம் கொடுத்தாலும் பூ சாரிகள் விடமாட்டர்கள்.
சுனாமி நிதி வங்கிகளில் தேங்கிக் கிடக்கிறது

## International aid for Tsunami Reconstruction
### Project Fund Allocation

| பாதிக்கப்பட்ட பகுதி | உறுதியளிக்கப்பட்ட தொகை $ | பயன்படுத்த தொகை $ |
|---|---|---|
| North East | 508,127,694 | 191,191,220 |
| South | 272,323,134 | 92,687,971 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 புதுவருடம் பிறந்ததடா

0 புவியினங்கள், மகிழ்ந்திடவே

0 புக்கின்ற புத்தாண்டில் - தமிழருக்கு

6 புது விடிவு பிறக்கட்டுமே !

தேசம், சிறுவர் தேசம் வாசகர்கள், விளம்பரதாரர்கள், கட்டுரையாளர்கள், படைப்பாளிகள் அனைவருக்கும் எமது இனிய புதுவருட வாழ்த்துக்கள்.

தேசம் நிர்வாகம்

## வெள்ளியிதழ் கொண்டனையோ

ஜெ.ஜெனனி
பிரான்ஸ்

தேசம் எனும் வடிவினிலே எமைத் தேடிவந்த சஞ்சிகையே
நேசமாய் நெருங்கிணைந்து, நேர்த்தியாய் ஈர்த்தனையோ !
பாசமாய் வந்தெம்முள், பகிர்ந்துவர்ந்தாய் - உன் கருத்தால்
வீச்சமாய் நிதம் நின்று, உன் வெள்ளியிதழ் கொண்டனையோ !

எட்டாண்டு காலமதில் எண்திசையும் பறந்தெங்கும்
சிட்டான சிறகினிலே, பல சிறப்பினையே அள்ளிவந்தாய்
பட்டெனவே பல கருத்தை பலமுடனே தூவியெங்கும்
தொட்டதுவே எம்நெஞ்சை தொலைந்ததனை கண்டதனால் !

வெள்ளி மலரானாய் - வெதும்பும் எம் குரலானாய்
துள்ளிவரும் கருத்தலைகள், துவண்டவரை அரவணைத்தே,
தள்ளிநின்ற விடுதலையை, தமதாக்கி எம்மிடத்தே
புள்ளிபோட்டிணைத்திங்கே.., புதுயுகம் படைத்திடவே !

நோக்கமே ஒன்றாக - நூறு பல இதழ்மலர
நேசமுடன் வாழ்த்திசைக்கும் நெஞ்சங்கள் உன்னகத்தே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே :

01 தேசத்தின் பார்வை
02 லண்டன் செய்திகள்
03 மீண்டும் மீண்டும் சுனாமி
05 இலங்கை அரசியலும் பிரபாவின் உரையும்
09 முஸ்லீம்களின் பிரச்சினை
10 என் மட்டு அன்னையே
11 மாவீரர் தினமும் பாலா அண்ணையின் லொல்சும்
13 இலங்கை அரசியலில் பௌத்தம்
15 வீட்டிற்குள் ஒரு வதைமுகாம்
17 பெண் விடுதலையின் யதார்த்தம்
19 மீண்டும் பெண் விடுதலையை நோக்கி
21 கடல்கட்டி
22 பேரழிவு ஆயுதம் ~ AIDS Made in America
26 சிவராம் : இரத்தக் கறை படிந்த கரங்கள்

இவ்விதழில் இருந்து சிறுவர் தேசம் இடம்பெற மாட்டாது. சிறுவர் தேசம் எதிர்காலத்தில் தனி இதழாக வெளிவரும் என்பதை அறியத் தருகிறோம்.

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 208 905 0452
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# சர்வதேச மனித உரிமைப் பிரகடனம்

1948 டிசம்பர் 10ல் ஐக்கியநாடுகள் சபை, சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை (Universal Decalaration of Human Rights) அறிவித்தது. இன்று 57 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையிலும் உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான மக்களுக்கு இந்த மனித உரிமைகள் மிகத் தொலைவிலேயே உள்ளது. அமெரிக்காவில் உள்ள கறுப்பர்களானால் என்ன, வெள்ளையர்களானால் என்ன இலங்கையில் உள்ள மலையகத் தமிழர்களானால் என்ன, சிங்களவர்களானால் என்ன, அதிகாரத்தில் உள்ளவர்கள் அதனைத் தக்க வைக்கவும் பாதுகாக்கவும் வெவ்வேறு வழிகளில் மனித உரிமைகளை மீறுகின்றனர். அதிலும் சிறுபான்மையினர் பெரும்பாலும் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே கருதப்படுகின்றனர்.

இப்பிரகடனத்தில் கையெழுத்திட்ட நாடுகள் மனித உரிமைகளைப் பேண வேண்டிய கடமைப்பாடு உடையவர்களாக இருந்தும் அதனை மதிக்கத் தவறுகின்றனர். ஜனநாயகத்தை ஏற்றுமதி செய்யப் போவதாக பறைசாற்றிய அமெரிக்க, பிரித்தானிய நாடுகளின் படைகள் ஈராக்கியர்களை சித்திரவதைக்கு ஆளாக்கியதும், தமிழக அரசு சிறப்பு முகாம்கள் என்ற பெயரில் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்களை அடைத்து வைத்திருப்பதும், இலங்கை அரச தமிழ் இளைஞர்களை எந்தவித விசாரணையுமின்றி சந்தேகத்தின் பெயரில் பல ஆண்டுகளாக அடைத்து வைத்திருப்பதும் சித்திரவதைக்கு உள்ளாக்குவதும் அரசுகளின் மோசமான மனித உரிமை மீறல்கள். பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமும் பயங்கரவாதத் தடைச் சட்டங்களும் அரசுகள் மனித உரிமைகளை மீறவும் அதிலிருந்து தப்பிக்கவும் வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை போன்ற அதிகாரமற்ற அமைப்புகளால் மனித உரிமை மீறல்களை தடுக்க முடிவதில்லை. ருவாண்டாவில் ஐ நா கொடிக்கு முன் 800,000 ருற்சி மக்கள் மூன்று மாத காலத்தில் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் ஐ நா தனது உறுப்பு நாட்டு அரசுகள் குறிப்பாக அமெரிக்க அரசு வழங்கும் நிதியிலேயே இயங்குகிறது. அதனால் அவர்களையும் அவர்களுக்கு வேண்டப்பட்ட அரசுகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஐ நா விடம் இல்லை. இதுதான் இவ்வுலகக் கட்டமைப்பு.

இதற்கும் அப்பால் மக்களின் விடுதலைக்காக போராட என்று புறப்பட்டவர்களும் அதிகாரத்தின் சுவையை ருசித்ததும் மக்களை மறந்து விடுகின்றனர். அல்லது தவறான அரசியல் வழிநடத்தலில் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுகின்றனர். அரச இயந்திரத்துக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளை அது பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் அப்பாவி மக்கள் மீது திருப்பிவிடுகின்றனர். மேலும் மாற்றுக் கருத்துடைய தம்மினத்தவர்களையும் தமக்குள் சிறுபான்மையாக வாழ்வோரையும் அழித்தொழிக்கவும் சில ஆயுத இயக்கங்கள் தயங்குவதில்லை.

இலங்கை போன்ற உள்நாட்டு யுத்தம் இடம்பெறும் நாடுகளில் தினம் தினம் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். ஆறு மாதக் குழந்தை முதல் கல்லூரி அதிபர்கள் வரை தயவுதாட்சணியமின்றி கொல்லப்படுகின்றனர். போராட்டத்தின் பெயரில் இப்படுகொலைகள் நியாயப்படுத்தப்படுகின்றன.

சர்வதேச கட்டமைப்புக்குள் உள்ள நாடும், எந்த கட்டமைப்புக்குள்ளும் வராத ஆயுத இயக்கங்களும் தம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய மக்களையும் அவர்களது உரிமைகளையும் பறிக்கின்றனர். அதுவும் அம்மக்களின் பெயரிலேயே.

மக்கள் அரசியல் விழிப்படைந்து தமது அதிகாரத்தை, பலத்தை நிறுவாத வரை அவர்களின் பெயரில் அரசுகளும், இயக்கங்களும் ஏறியிருந்து சவாரி செய்வதும் அவர்களது உரிமைகளைப் பறித்தெடுப்பதும் தவிர்க்க முடியாதது. ஆகவே மக்களுடைய வாழ்வுரிமையும் மற்றும் உரிமைகளும் அவர்களின் அதிகாரத்தை நிறுவுவதிலேயே தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கிய நிகழ்வுகள்

1. நவஜோதி யோகரட்ணத்தின் 'எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்' நூல்வெளியீடும் மறைந்த எழுத்தாளர் அகஸ்தியரின் நினைவும் டிச 3ல் இடம்பெற்றது. அப்பகுதி மேயரும் விழாவில் கலந்து சிறப்பித்தார். ஈழத்து கவிதைகள் பட்டவர்த்தனமாக வெளிப்படையாக பேசுகின்றன. அவை யாப்புக்கு அமைய செதுக்கப்படவில்லை என்றார் விமர்சகர் சச்சிதானந்தன். தொடர்ந்து பேசிய நித்தியானந்தன், பெண்ணிய எழுத்துக்கள் எப்படி அமைந்தாலும் வரவேற்கப்பட வேண்டும். செதுக்கி உள்ளதா? இல்லையா என்பது அவசியமில்லை என்றார்.

2. விமல் குழந்தைவேலின் 'குறளிக் குஞ்சன்' சுனாமி சிறுகதைத் தொகுதியின் வெளியீடு தேசம் ஆதரவில் டிச 17ல் இடம்பெற்றது. விமலின் எழுத்துக்கள் மனிதநேயத்தை முன் நிறுத்துவதாக விமர்சகர்கள் தெரிவித்தனர். விமல் பிரதேச மொழிக்குள் தன்னைதக்க வைக்க முனைவதாக சேனன் குறிப்பிட்டார். சமூகவிதிகளை எல்லைமீறி கட்டுடைப்பு செய்ய முனைபவர்களின் பலவீனங்களை மு நித்தியானந்தன் நகைச்சுவையுடன் சுட்டிக் காட்டினார். விமலின் பெண்ணியம் ஆணினூடாகவே சொல்லப்படுவதாக மாதவி சிவலீலன் தன் விமர்சனத்தில் குறிப்பிட்டார்.

## புதுவருட வாழ்த்துச் செய்தி

ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் போதும் நிரந்தர சமாதானம் பிறக்காதா என்ற ஆதங்கத்துடன் தான் இலங்கை மக்கள் புது வருடங்களை எதிர்கொள்கிறார்கள். இலங்கையர் யாவரும் சமாதானத்துக்கு எதிராக இல்லை. ஆயினும் சமாதானம் குறித்து வேறுபட்ட கருத்தைக் கொண்டிருக் கிறார்கள். எமது பழைய துயரங்கள் இனமுரண்பாட்டு எதிர் செயற்பாடுகள் எம்மைவிட்டு பழையன கழிதலாய் கழிந்தகன்று புதிதாய் உறவுகள் மீண்டும் தளிர்க்க வேண்டும்.

சமாதானத்தின் மீது உண்மையான நம்பிக்கை, தனி மனித உரிமைகளை மதிக்கின்ற, சகிக்கின்ற சமூக இன உரிமைப் போராட்டங்கள், வெளிப்பாடுகள், ஜனநாயக விழுமியங்கள் பேணப்படுகின்ற சிவில் சமூக அமைப்புக்கள் என்று ஆராக்கியமான சமூகச் சூழலில் நிரந்தர சமாதானம் மலரும் என நம்புவோம். புதிய வருடம் புதிய சிந்தனைகளை சமாதானம் குறித்த புதிய அணுகுமுறையினை பரஸ்பர இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தினை கட்டியம் கூறும் ஆண்டாக மலரட்டும். நம்பிக்கையில் தானே வாழ்க்கையின் இயக்கமே விசை கொண்டுள்ளது.

என்.எம்.எம்.பசீர் ( இயக்குநர் )
ஸ்ரீலங்கன் முஸ்லீம் தகவல் மையம்

3. மாற்று, கனவுகள் நிஜமானால் படங்களைத் தந்த ஆர் புதியவனின் மண் படக் கலைஞர்களின் அறிமுக நிகழ்வு நவம்பர் 19ல் தென்மேற்கு லண்டனில் இடம்பெற்றது. தாயக மண்ணில் காணப்படும் ஆழமான முரண்பாட்டை காதலினூடாக சொல்ல முற்படுகிறார் வன்னியைத் தாயகமாகக் கொண்ட இயக்குநர் புதியவன்.

## கிங்ஸ்பறியில் இளைஞர் சுட்டுக்கொலை



கிங்ஸ்பறியைச் சேர்ந்த டக்ளஸ் யோகராஜா(27) என்ற இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டு உள்ளார். டிசம்பர் 11 இரவு 9:50 அளவில் இவரது உடல் குயின்ஸ்பறி றோட்டில் இருந்து பொலிசாரால் மீட்கப்பட்டது. வெள்ளைநிற வான் 9:50 அளவில் சம்பவ இடத்தில் இருந்து சென்றுள்ளது. வெள்ளைநிற ரியுப் பொருத்தப்பட்ட இவ்வான் பற்றிய தகவல்களை பொலிசார் விசாரிக்கின்றனர். DCI Dave Cobb (Specialist Crime Directorate) இக்கொலை விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். இவ் வாண்டு இடம்பெற்ற 2வது கொலைச் சம்பவம் இதுவாகும்.

இது பற்றி தகவலளிக்க விரும்புவோர் 020 8358 0200 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். அல்லது க்ரைம் ஸ்ரொப்பர்ஸ்க்கு 0800 555 111 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும். தம்மை வெளிப்படுத்தாமல் தமிழில் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் Tamil Hotline: 0800 587 2935 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## விம்பம் குறும்பட விழா முடிவுகள்

1 Best Film - Sri Lanka
KITCHAN
Mr A Vimalaraj (SRI LANKA)

2 Best Film - India
BIRTHDAY
Mr K Muthukumar (INDIA)

3 Best Film - Exile
BR(A)ILLIANT
Arun Vaidiyanathan (USA)

4 Best Director
Mr K Muthukumar
(Birthday Story) (INDIA)

5 Best Editor
Patric Pathmanathan
(Antha Orunaal)
(CANADA)

6 Best Camaraman
Mr Panner K Selvam
(Elamai) (INDIA)

7 Best Script
Mr A Vimalaraj
(Kitchan) (SRI LANKA)

8 Best Actress
Mrs S Bhawani
(You 2) (CANADA)

9 Best Actor
Master Delushanth Mohan
(Kitchan) (SRI LANKA)

விம்பத்தின் 2வது குறும்பட விழா நவ.20ல் லூசியம் சிவன்கோவிலில் இடம்பெற்றது.

**கிச்சான் இயக்குநர் விமல்ராஜ் உடனான சந்திப்பு அருத்த இதழில்**

*தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மீண்டும் சுனாமி



சேனன்
Committee for Workers International - CWI

சுனாமி அலை ஓயாத அலையாக வறிய மக்கள் வயிற்றில் தொடர்ந்து அடித்துக் கொண்டிருக்கின்றது. உலக அரசாங்கங்கள் வாய் திறந்து கவலை தெரிவிக்கும் முன்னரே சாதாரண மக்கள் தமது அன்றாடத் தேவைகளை தியாகம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அள்ளிக் கொடுத்திருந்தார்கள். சுனாமி வந்து போன ஒரு கிழமைக்குள் Oxfam (Charity) செயாரிற்றி £160 மில்லியன் பவுண்களை சேகரித்திருந்தது. CAFOD - Catholic Agencis for Overseas Development என்ற செயாரிற்றிக்கு 35,000 பேர் உடனடியாக பணம் வழங்கி இருந்தனர். Oxfam சேகரித்த £160 மில்லியனில் நமக்கு அதிகமான நன்கொடை பொது மக்களிடம் இருந்து மட்டுமே வந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஓட்டுமொத்தமாக இங்கிலாந்தில் மட்டும் மக்கள் £300 மில்லியன் பவுண்கள் நன்கொடை வழங்கியிருந்தார்கள். உலகளவில் இலங்கைக்கு மட்டும் $2.95 பில்லியன் டொலர்கள் உதவித்தொகை வழங்க இருப்பதாக உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

இப்படியிருக்க இன்னுமேன் பாதிக்கப்பட்ட மக்கள் பிச்சை எடுத்தும் பட்டினியிலும் வாடுகிறார்கள்? சுகாதார, கல்வி, உணவு வசதியின்றி ஏன் திண்டாடுகிறார்கள்? அழிந்து போன 50,000க்கும் அதிகமான வீடுகளில் ஏன் வெறும் 1,000 மட்டும் கட்டப்பட்டிருக்கிறது? இலங்கை சென்ற 5,000க்கும் மேலான கென்ரயினர்களில் காணாமல் போன 2,000 கென்ரயினர்கள் எங்கே? இந்தப் புதிரை அவிழ்ப்பது சிரமமான விசயமில்லை.

சுனாமி வந்து போன கையோடு ஒரு 500க்கும் மேற்பட்ட NGO - Non Government Organization கள் (அரசுசார்பற்ற சேவை நிறுவனங்கள்) இலங்கை வந்திறங்கின. இவை மக்களிடம் சேகரித்த பணத்தில் புதுக்கார் வாங்கி ஓட்டியுள்ளனர். சுனாமி நிதியில் £1 மில்லியனை வாகன வரியாக இலங்கை அரசுக்கு கட்டியுள்ளது Oxfam.

உலகப் புகழ்பெற்ற இன்னுமொரு நிறுவனமான CARE கிராமத்தில் துப்பரவு வேலை செய்பவர்களுக்கு மட்டும் $3.60 டொலர்கள் ஒரு நாளைக்கு வழங்கிவருகிறது. நிவாரணமாகக் கொடுத்துப் பழக்கக் கூடாதாம் என்று விளக்கமளிக்கிறது அந்நிறுவனம். அதுவும் ஒரு கிராமத்தில் அதிக பட்சம் 80 பேர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. 2 மில்லியனுக்கும் மேலான மக்கள் CARE க்கு $3.60 ஐ விட அதிகமான பணம் வழங்கியுள்ளார்கள். ஏறத்தாள 12,000 பேர் வேலை செய்யும் இந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரிகளின் வருட சம்பளம் லட்சக்கணக்கான பவுண்கள். $3.60 ஒரு நாளைக்கு வாங்கும் இலங்கைத் தொழிலாளிக்கு அது ஒரு பெரிய வருமானம் தான். ஆனால் அதில் மிச்சம் பிடித்து இழந்ததை மீட்க அவனுக்கு பல வருடங்கள் எடுக்கும். அதற்குள் CARE உத்தியோகத்தர்கள் பல அரண்மனைகளை வாங்கக் கூடிய அளவுக்கு பணம் சேர்த்துவிட்டிருப்பார்கள்.

சேரும் நிதியில் 87 வீதமான பணம் மட்டுமே சேவைக்கு வழங்கப்படும் என்று United Way நிறுவனம் வெளிப் படையாக அறிவித்திருந்தது. இங்கிலாந்துச் சட்டப்படி 87 வீதம் கூட வழங்கத் தேவையில்லை. இன்னும் சில நிறுவனங்களில் உதவியாக வழங்கப்படும் நிதியிலும் அந்நிறுவனங்களின் நிர்வாகச் செலவு அதிகமாக உள்ளது. பிரித்தானியாவில் இருந்து தண்ணீர் போத்தல்களை கொண்டு கொண்டு செல்லும் போது தண்ணீர் போத்தல்களின் செலவிலும் பார்க்க அனுப்புவதற்கான விநியோகச் செலவு அதிகமாகிறது.

இன்னுமொரு அமைப்பான CCF (Christian Charity Fund) திட்டமிட்ட முறையில் சிறு வியாபாரிகளுக்கும் மத்தியதர வர்க்க மக்களுக்கும் மட்டும் பணம் வழங்குகின்றது. அதுவும் உதவிப்பணம் இல்லை. வட்டியுடன் சேர்த்த கடன். அவர்கள் சுனாமியால் பாதிக்கப்படாத வியாபாரிகளையும் மத்திய தர வர்க்கம் மற்றும் முதலாளிகளையும் தேர்ந்தெடுப்பதற்கு காரணம் வட்டி திரும்பிவரும் என்ற ஒரே ஒரு நம்பிக்கை மாத்திரமே.

இன்னுமொரு அமைப்பு Citi Group. Micro Credit, Micro Finance என்ற பெயரில் வட்டிக்கு பணம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. பெரும் செலவில் ஆய்வு செய்து இவர்கள் விட்ட அறிக்கை வேடிக்கையான தகவல்களைக் கொண்டது. எத்தனை விவசாயிகளுக்கு கடன் வழங்கலாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை மீனவர்களுக்கு உபகரணம் வாங்க கடன் வழங்கலாம், எத்தனை சிறு வியாபாரிகளுக்கு கடன் கொடுக்கலாம் என்று ஒரு வியாபார அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள்.

இது தான் அவர்கள் செய்யும் சேவை. இருப்பினும் தம்மையும் ஒரு சேவை நிறுவனமாக பாவிப்பதும் சேவைக்காக சுனாமி நிதியை பெறுவதும் தான் கொடுமையான விடயம். UN கூட இந்நிறுவனத்தை செயாரிற்றிகள் பட்டியலில் சேர்த்துள்ளது. ஆனால் 'Micro Credit Program சில நேரங்களில் சரியான வழியல்ல. கடனை திருப்பிக் கொடுக்க முடியாதவர்கள் தாங்கள் ஏற்கனவே இருக்கும் நிலையிலும் மோசமாக போக வேண்டி நிர்ப்பந்திக்கப்படலாம். அதனால் வருவாய் குறைந்தவர்களும் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதவர்களும் வேறுவிதமான நன்கொடை முறைகளை நாட வேண்டும்' என்ற விளக்கத்தையும் UN சேர்த்துள்ளது.

UN ஏன் இன்றைக்கு வறிய நாடுகளை பிரதிநித்துவப் படுத்த முடியாது என்பதற்கு இது ஒரு சின்ன உதாரணம். அண்மையில் UN, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான கிளின்ரனையும், புஸ் சீனியரையும் சுனாமி நிவாரண பிரதி நிதிகளாக நியமித்துள்ளது. (தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி புஸ்ஸின் உத்தரவின் படி). கிளின்ரன் பதவி ஏற்ற கையோடு தான் ஜனாதிபதியாக இருந்த போது தன்னுடன் வேலை செய்த நம்பிக்கைக்குரியவர்களை தனக்குக் கீழ் வேலைக்கு எடுத்தது தான். தனக்கென்று ஒரு தனி அரசாங்கத்தை ( கொபி அனனின் குலை நடுங்கும் வகையில் ) UN இல் தற்போது கிளின்ரன் நிறுவியுள்ளார். கிளின்ரனிடம் இருந்து சுனாமி மக்களை இனி யார் காப்பாற்றுவார்களோ?

Citi Group வட்டியில்லாமல் அல்லது மிகக்குறைந்த வட்டியில் கடன் வழங்கலாமே என்று ஆதங்கப்பட்டால் தயவுசெய்து அவர்களது இணையத்தளத்துக்கு சென்று பாருங்கள். குறைந்த வட்டியில் கடனை வழங்குவது நிறுவனம் தொடர்ந்து இயங்குவதை பாதிக்கும் என்று விளக்கம் தரும் அவர்கள் இலங்கை பற்றி குறிப்பிடுவதை படித்தால் உங்கள் அடி வயிற்றில் கிலி உண்டாகும்.

ஆச்செ (Aceh சுனாமியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம்) போன்ற இடங்களில் தொடர்ந்து நிலவிவரும் இனப்போராட்டம் மற்றும் தனிநாட்டுக் கோரிக்கையால் Micro Finance முழுமையாக செயல்பட முடியாமல் உள்ளது. ஆனால் இலங்கையில் இந்தப் பிரச்சனை இல்லை. அங்கு Micro Finance ஆழமாக தன் காலை ஊன்றியுள்ளது. இதற்குப் பிறகும் உங்களுக்கு விளக்கம் தேவையிருக்காது.

இது செயாரிற்றிகளின் கதை. ஒதுக்கப்பட்ட $2.95 மில்லியன் டொலர்களில் செயாரிற்றிகளின் பங்கு 853 மில்லியன்கள் என்று கணிப்பிடப்பட்டிருந்தது. மிச்சம் எங்கே என்ற கேள்வி எழலாம். கடந்த 12ம் திகதி (12.12.2005) Times பத்திரிகை அறிக்கை இன்னுமொரு புது வெளிச்சத்தை உண்டு பண்ணியுள்ளது.

> “பாதிக்கப்பட்ட நாங்க அப்படியேதான் இரிக்கிறம். ஆனா எங்கட பேரச் சொன்னவனெல்லாம் புதுப்புது பணக்காரனாகிற்றான் தாய ..... நீ வந்தத தண்ட மாடி ஊட்டுக்கு மேல ஏறி நிண்டு புதுனம் பார்த்தவனெல்லாம் போளின்ல நில்லாம நிவாரணம் வாங்கிற்றுப் போறான்.”
>
> விமல் குழந்தைவேல்
> குறளிக் குஞ்சனில்

DEC ( Disaster Emergencies Committe - An Umbrella Group Representing Major Charities) ஏறத்தாள £300 மில்லியன்கள் சேர்த்திருந்தது. அதேயளவு பணத்தை வழங்க இருப்பதாக உறுதியளித்திருந்தார் ரொனி பிளேயர். ஆனால் தற்போது அது £275 மில்லியன்களாக குறைந்துள்ளது. அது மட்டுமன்றி இதில் £75 மில்லியன்கள் மட்டுமே நேரடி நிவாரண நிதிக்கு வழங்கப்பட உள்ளது. இதே கதை தான் ஏனைய பணக்கார நாடுகளின் கதையும். சுனாமிக்கான நிதியை கொடுப்பதா விடுவதா என்ற தீர்மானம் எடுக்கும் பலமும் இவர்களிடம் தான். வாரி வாரிக் கொடுத்த இந்த நாட்டு மக்கள் இந்த விபரங்கள் பற்றி இருட்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சரி சிறிதளவு நிதியாவது இலங்கை போய் சேர்ந்தது தானே. அதற்கு என்ன நடந்தது? செயரிட்டி களின் அதே குட்டையில் ஊறிய பழங்கதைதான். Transperancy Internationl (படம் - Logo), Executive Director J C வெலியமான, அரசியல் நோக்கத்துக்காக சுனாமி நிவாரணங் களையும் நிதியையும் அரசாங்கம் பயன்படுத்துவதாக வெளிப்படையாக கண்டித்திருந்தார். அரசியல் நோக்கம் கருதி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவது சர்வ சாதாரணமாக நிகழ்கிறது. நீர்கொழும்பில் பாதிக்கப்பட்டது 600 பேர் மட்டும் தான். இருப்பினும் 76 மில்லியன் ரூபாய்க்கும் சற்று அதிகமான தொகை 15,843 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக Auditor General இன் அறிக்கை கூறுகிறது. கிழக்குப் பிரதேச கல்முனை, தங்காலை முதலான இடங்களிலும் இதே நிலைதான். விபரங்களுக்கு Auditor General அறிக்கையைப் பாருங்கள்.


பாதிக்கப்பட்ட ஒரு லட்சம் மக்கள் வறுமையில் துடித்துக் கிடக்க அரசியல் கட்சிகளின் பினாமிகள் சில நூறுபேர் மட்டும் நிவாரணத்தை சுருட்டிக் கொண்டு விட்டார்கள். உலக அரசியல் அமைப்பை மாற்றி அமைப்பதைத் தவிர இதற்கு வேறு வழியில்லை. ❐

*தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை அரசியலும் பிரபாவின் உரையும்



த ஜெயபாலன்

இலங்கை அரசியலில் மிகவும் கூர்ந்து அவதானிக்கப்படும் பிரபாகரனின் மாவீரர் தின உரை அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் நெருக்கடிகளையும் கோடிட்டுக் காட்டி யுள்ளது. புலி சார்பு ஊடகங்கள் வெளியிட்டு வந்த தகவல்களில் இருந்து மாறுபட்டதாக, பிரபாவின் உரை அமைந்திருந்தது. பிரபா ஒன்றையொன்று முரண்படும் வகையிலும் சில கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார்.

## சர்வதேச சமூகம்

30 நிமிடங்கள் வரை நீடித்த இவ்வுரையின் முக்கிய அம்சமாக சர்வதேச சமூகம் பற்றிய புலிகளின் பார்வை என்ன? என்பது வெளிப்பட்டு இருந்தது. 'தமிழீழ விடுதலைக்காகத் தமிழ் மக்கள் புரிந்துள்ள தியாகத்தை சிங்களத் தேசம் புரிந்து கொள்ள எத்தனிக்கவில்லை' என்றும் 'சிங்களப் பேரினவாத ஆட்சிபீடங்கள் எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்துவிட்டன' என்றும் தெரிவித்திருந்த தலைவர் பிரபா 'எமது தியாகத்தை சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ளாதது எமக்கு ஏமாற்றத்தையும் வேதனையையும் தருவதாக' குறிப்பிட்டார்.

பிரபாவின் உரையில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் 'சர்வதேச சமூகம்', 'சர்வதேச நாடுகள்', 'உலக நாடுகள்' என அழுத்தமாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது. தமது போராட்டத்தின் நியாயத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற ஆதங்கம் தெளிவாக வெளிப்பட்டது.

'சமாதானப் பேச்சு என்பது எமது விடுதலைப் போராட்டப் பாதையில் வைக்கப்பட்ட பொறி என்பதை தாம் நன்கு அறிந்திருந்தும், வரலாற்றுச் சூழ்நிலை காரணமாகச் பிரதேச வல்லரசான இந்தியாவின் தலையீடு, சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக சிங்கள அரசுடன் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்ற தாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம்' என பிரபா சுட்டிக்காட்டினார்.

தனது உரையில் வெவ்வேறு இடங்களில் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்ட அவர் மற்றுமொரு இடத்தில் '2001 டிசம்பர் 24ல் தன்னிச்சையாகப் போரை நிறுத்திச் சமாதானக் கதவுகளை திறந்துவிட்டோம்' எனத் தெரிவிக்கிறார். 'எமது அமைப்புக்குச் சட்டரீதியான அங்கிகாரத்தைப் பெறுவதும், சிங்கள ஆட்சியாளர்கள் நியாயமான தீர்வுத் திட்டத்தை முன் வைக்கப் போவதில்லை என்பதை சர்வதேச சமூகத்தக்கு எடுத்துக் காட்டுவதும் பேச்சுவார்த்தைகளில் தாம் கலந்து கொள்வதற்கு மற்றுமொருகாரணம்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'சமாதானத்தின் திரைக்குப் பின்னால், மறைமுகமாக தமது இயக்கத்திற்கு எதிராக ஓர் இரகசிய யுத்தம் நடத்தப்படுகிறது' என்று குறிப்பிட்ட பிரபா 'இந்த நிழல் யுத்தத்தின் நிஜ வடிவத்தை சர்வதேச சமூகம் கண்டு கொள்ளும் எனத் தாம் நம்புவதாக' குறிப்பிட்டார்.

சமாதானத்தின் பின் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக் கையும் கண்காணிப்புக் குழுவினரிடம் பதிவு செய்யப்பட்ட புலிகளுக்கு எதிரான முறைப்பாடுகளும் சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பதுமான விடயங்களால் புலிகளை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கின்றது. சுப தமிழ்செல்வன் புன்சிரிப்புடன் புலி சார்பு ஊடகங்களுக்கு சொல்லும் கதையை தமிழ் மக்கள் கேட்டுத் திருப்திப்பட்டு சிரிப்பின் செல்வர் என்று பட்டம் கொடுப்பார்கள். ஆனால் சர்வதேச சமூகத்துக்கு புன்சிரிப்பு மட்டும் போதாது என்பது புலிகளின் பயணத்தடை உறுதிப்படுத்தி உள்ளது.

'ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட தேசமாக அணிதிரண்டு நிற்கும் தமிழினத்தின் உரிமைக் குரலை சர்வதேச சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் அசட்டை செய்ய முடியாது' என்ற பிரபாவின் வாதம் சர்வதேச சமூகத்திடம் செல்லுமா என்பது கேள்விக்குறியே. சர்வதேச சமூகம் பற்றிய தனது வாதத்தை தொடரும் பிரபா, 'எம்மை ஒரு பயங்கரவாதக் குழு என சிங்கள ஆட்சியாளர்கள் செய்யும் பரப்புரைகளை நம்பி உலக நாடுகள் சில எம்மை பயங்கரவாதப்பட்டியலில் வைத்திருப்பது எமக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகிறது' எனக் குறிப்பிட்டார். இது புலிகளின் அரசியல் பலவீனத்தையே மறைமுகமாக சுட்டிக்காட்டுகிறது என்பதை அறிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் படித்து வரவேண்டியதில்லை.

புலிகளதும் மேற்குலகில் உள்ள அவர்களது ஆதரவு சக்திகளதும் அரசியல் நடவடிக்கைகள் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் பலவீனப்படுத்தப்படுகிறது. களத்தில் புலிகள் சில முற்போக்கான மாற்றங்களை ஏற்படுத்தாத வரை சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தை வென்றெடுப்பது மிகக் கடினமானதாகவே இருக்கும்.

பிரபா தனது உரையில் ஒரு படி மேலே சென்று பயங்கரவாதத்திற்கான வரைவிலக்கணத்தை கோரியுள்ளார். 'பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு ஒரு தெளிவான, தீர்க்கமான வரைவிலக்கணம் இல்லாததால் நியாயமான அரசியற் போராட்டங்களும் பயங்கரவாதமாக திரிபு படுத்தப்படுகின்றன' என்ற அவரது கூற்று நூற்றுக்கு நூறுவீதம் என்ன அதற்கும் மேல் உண்மையானது. செப்ரம்பர் 11 அமெரிக்கா மீதான தாக்குதலுக்குப் பின் 'அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்பவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தப்படுகிறது' என பிரபா தொடர்ந்தார்.

தாம் பயங்கரவாதிகள் அல்ல போராளிகள் என்பதை நிருபிக்கும் பொறுப்பு போராடும் அமைப்புகளுக்குரியது. அதற்கேற்ப தமது அரசியலை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். பயங்கரவாதத்துக்கு சர்வதேசம் வரைவிலக்கணம் கொடுக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் ஆறு மாதக் குழந்தை வெட்டிக் கொல்லப்படுவதும் அதிபர்கள் சுட்டுக் கொல்லப்படுவதும் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதும் .............. அதுவும் சமாதான காலத்தில், நிச்சயமாக விடுதலைப் போராட்டத்துக்காக என்று சொல்ல முடியாது.

ஆகவே யதார்த்தத்தை புரிந்துகொண்டு சர்வதேச சமூகத்தின் தேவையை வி.புலிகள் மதிப்பீடு செய்ய முற்பட்டு இருந்தால் அது ஒரு ஆரோக்கியமான நகர்வே.

## இந்தியாவும் வி.புலிகளின் எதிர்காலமும்

இம்முறை தனது உரையில் பிரபா இந்தியாவுக்கு எதிரான தாக்குதலைத் தவிர்த்து இருந்தது அவதானத்துக்கு உரியது. 'இந்தியத் தலையீட்டின் போது போராட்டத்திற்கு அச்சுறுத்தல் எழுந்த போது இந்திய வல்லரசையும் அதன் இராணுவ இயந்திரத்தையும் எதிர்த்துப் போராடினோம்' என்ற குறிப்பைவிட இந்தியா பற்றி எந்தக் குறிப்பையும் அவர் வெளியிடவில்லை.

இந்திய - இலங்கை புவியியல் நெருக்கம் காரணமாக இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது. மேலும் ஆரம்ப காலத்தில் தமிழீழ விடுதலை அமைப்புகள் இந்தியாவிடம் சரணாகதி அடைந்ததும், இந்தியாவை தாம் பயன்படுத்தலாம் எனத் தப்புக் கணக்கு போட்டதும், இலங்கை - இந்திய ஒப்பந்தமும், ராஜீவ்காந்தியின் படுகொலையும் இலங்கை அரசியலில் இந்தியாவும் ஒரு அங்கம் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.



ராஜீவ் மறைவுக்குப் பின் அரசியலுக்கு வந்துள்ள அவரின் குடும்பத்தினர்.

இதனால் இலங்கை அரசியலில் குறிப்பாக புலிகளின் மேலாண்மையை இந்தியா அனுமதிக்குமா என்ற சந்தேகம் வலுவாகவே உள்ளது. இராணுவரீதியிலோ அரசியல் ரீதியிலோ புலிகளின் கை ஓங்குவதை இந்தியா கட்டுப் படுத்தவே முனையும். யாழ் முற்றுகையின் போது இந்தியா இராணுவ உதவிகளை வழங்கியமை, கருணாவிற்கு அடைக் கலம் கொடுத்துள்ளமை என வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்தியா இதனை நிருபித்துள்ளது. இந்தியா பலவீனமான புலிகளையே விரும்புகின்றனர். அதனால் தான் 'பிரபாகரனும் பொட்டு அம்மானும் இல்லாத புலியை இந்தியா ஆதரிக்கும்' என இந்தியாவின் முன்னணி ஹிந்து பத்திரிகை ஆசிரியர் ராம் எழுதியிருந்தார்.

இவற்றின் பின்னணியில் பிரபா தலைமையில் இலங்கையில் சமாதான சூழல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் கேள்விகுரியதாகவே உள்ளது. தமிழர்களின் பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வு அல்லது நிரந்தரத் தீர்வு ஏற்படுமானால் பிரபாவை அதில் எங்கு பொருத்துவது என்பது கடினமான விடயம். ஏனெனில் இந்தியா தனது நீதிமன்றம் மூலம் பிரபாவுக்கும் பொட்டம்மானுக்கும் 'செக்' வைத்துள்ளது. யுத்த சூழலில் இந்த செக் விளையாட்டெல்லாம் அர்த்த மற்றது. யுத்தம் நடைபெற்றிருந்தால் கருணாவும் மாவீரர் பட்டியலில் இடம்பெற்றிருப்பார். ஆனால் சமாதானத் தீர்வுக்கு இவ்விடயங்கள் மிக முக்கியம்.

புலிகளும் இந்தியாவும் ஒரு நல்லிணக்கத்துக்கு வராதபட்சத்தில் இந்தியா தனது நீதிமன்றத் தீர்ப்பை பயன்படுத்தி பூச்சாண்டி காட்டும். இன்றுள்ள நிலையில்

தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் என்பது பிரபாவுக்கு சாதகமாக இல்லை. மாறாக மிக பின்னடைவுக்கே வழிவகுத்துள்ளது. அதனால் வரப்போகும் சமாதானம் பிரபாவுக்கும் புலிகளுக்கும் நன்மை பயக்கக் கூடியதாக மாற்றப்பட வேண்டும்.

இந்தச் சிக்கலை அவிழ்ப்பது இந்தியாவின் கைகளில் தான் உள்ளது. இந்தியா புலிகளின் தலைவர்களுக்கு பொது மன்னிப்பு அளித்து அவர்களுக்கு சட்ட பாதுகாப்பை அளிக்க வேண்டும். அப்படிச் செய்யாத பட்சத்தில் சமாதான முயற்சிகள் பயனளிக்கமாட்டாது. புலிகள் அமைப்பு ஜனநாயக நிரோட்டத்தில் வரும் போதும் பிரபா பொறுப்புகளை ஏற்க முடியாமல் தொடர்ந்தும் தலைமறைவாக வாழ வேண்டிய நிலையே ஏற்படலாம். இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் இடத்து பிரபாவினது எதிர்காலத்திற்கு சமாதானம் தடையாகவே இருக்கும்.

இது இல்லாமல் இந்தியாவை தூக்கி ஒதுக்கிவிட்டு செயற்படக்கூடிய அரசியல் பலம் புலிகளிடம் உள்ளதா என்பது ஐயத்திற்குரியது. அருகில் உள்ள உலக வல்லரசான அமெரிக்காவை எதிர்த்து புரட்சி நடத்தியது கியூபா. அமெரிக்காவும் அதன் அணியில் இருந்த நாடுகளும் உளவு நிறுவனங்களும் பல்வேறு அழுத்தங்களை வழங்கியும் கியூபாவின் புரட்சியை தடுக்க முடியவில்லை. ஆனால் இலங்கை அரசாங்கத்தின் அரசியல் பிரச்சாரத்தையே புலிகள் முறியடிக்க முடியாமல் சர்வதேசரீதியில் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் போது இந்தியாவை எதிர்த்து காய்களை நகர்த்துவது என்பது மிகக் கடினமானது. வைக்கோ, நெடுமாறன் போன்றவர்களால் தமிழக மக்களையே உடன்பட வைக்க முடியவில்லை. இந்த மண் குதிரைகளை நம்பி ஆற்றைக் கடக்க முடியாது என்பதை புலிகள் நிச்சயம் உணர்ந்திருப்பர். அதனால் சாட்சிக்காரனின் காலில் வீழ்வதிலும் சண்டைக்காரனின் காலில் வீழ்வதே மேல். இந்த அணுகுமுறையையே பிரபா இந்தியாவிடம் கடைப் பிடிக்க முயன்றுள்ளார்.

## சிங்கள பேரினவாத ஆட்சியும் தமிழ் மக்களும்

சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை காலம் காலமாக ஏமாற்றி வந்த விடயம் பாட்டி வடை சுட்ட கதைபோல் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன கதை. இதற்காகவே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். சிலர் பரலோகம் அனுப்பப்பட்டனர். அவர்கள் கையாலாகாதவர்கள் என்று சொல்லியே எங்கள் தம்பிகள் எல்லாம் ஆயுதங்களை கையில் ஏந்தினர் என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும். 2005 ல்,

'தன்னாட்சி அதிகாரமுடைய ஆட்சியமைப்பை சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேசிப் பெற்றுக் கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பது வெறும் பகற்கனவு. தென்னிலங்கை அதிகார வர்க்கம் தமிழரின் சுயநிர்ணய உரிமையை என்றுமே அங்கிகரிக்கப் போவதில்லை. நாமாகவே போராடி, எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை' என பிரபா தனது உரையில் குறிப்பிடுவது நாம் ராட்டினத்தில் சுற்றி வந்து மீண்டும் தொடக்கப் புள்ளியில் தான் நிற்கின்றோம் என்ற எண்ணத்தையே தோற்றுவிக்கிறது.

'ரணிலின் அரசு எம்மிடம் இருந்து ஆயுதங்களைக் களைய சதிவலையைப் பின்னுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியது, சந்திரிகா அம்மையார் சமாதானத்திற்கு விரோதமான இனவாத சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து புதிய அரசை அமைத்தார்' என்ற பிரபாவின் குற்றச்சாட்டுகள் அர்த்தமற்றவை. நாம் இன்னும் எமது அரசியல் பாடத்தை சரியாகப் புரிந்துகொள்ளவில்லையோ என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது.

அதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் 'இக்கட்டத்தில் எமக்கு ஒரு புதிய சவாலாக சிங்களத் தேசத்தில் நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றுள்ளார்; புதிய அணுகுமுறையை கடைப்பிடிக்கப் போவதாக அவர் அறிவித்து உள்ளார்; நேசக்கரம் நீட்டி சிறிது காலம் அவரது நடவடிக்கைகளைப் பொறுத்திருந்து பார்ப்போம்' என்ற கூற்று அமைந்துள்ளது.

அரசு வேறு. அரசாங்கம் வேறு. இலங்கையில் இருப்பது சிங்கள பேரினவாத அரசு. அதில் அன்று எஸ் ட பிள் யு பண்டாரநாயக்கவோ இன்று போல் மகிந்த ராஜபக்ஷவோ நாளை அப்புகாமியோ ஆட்சித்தலைவராக வரலாம். ஆனால் சிங்கள பேரினவாத அரசு மாறாது. 'சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி சந்திரிகா விருப்பம் தெரிவித்தும் சுனாமி பொதுக்கட்டமைப்பை உருவாக்க முடியாது போனது' என பிரபா குறிப்பிட்டதன் மூலம் அரசு என்ற ஸ்தாபனத்தின் பலம் புரிந்து கொள்ளப்பட வேண்டியது.

## இலங்கை அரசியல் கட்சிகளுடன் புலிகளின் உறவு

2003ல் ரணிலின் சதிவேலைகளைத் தான் அறிந்திருந்ததை பிரபா தனது உரையில் குறிப்பிட்டு இருந்தார். ஆனால் அதற்குப் பின்னான புலிகளின் செயற்பாடுகள் ரணிலை ஆதரிப்பதாகவே அமைந்திருந்தது. சுனாமியின் போது அப்போது பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ யாழ் வந்தபோது அவர் விரட்டியடிக்கப்பட்டார். ஆனால் ரணில் விஜயம் செய்தபோது அவர் கௌரவிக்கப்பட்டார். இவ்வாறு புலிசார்பு ஊடகங்கள் 65,000 மக்களின் படுகொலைகளுக்கு பொறுப்பாக இருந்த ஆனால் அதற்கு வருத்தம் கூடத் தெரிவிக்காத கட்சியின் தலைவரை சமாதானத் தூதராகவே காட்டின. ஆனால் ஒரு தமிழரையும் துன்புறுத்தாத ஜேவிபியையும் ஒப்பீட்டளவில் மோசமற்ற சுதந்திரக் கட்சியையும் மட்டும் இனவாதத்தின் மொத்த வடிவாகக் காட்டின.

இதன் விளைவாக தமிழ் மக்களும் ரணிலை சமாதானத்தின் தூதுவராக கண்டனர். தம்மை புலிச்சாயம் பூசிக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி பா உ மகேஸ்வரன், மலையக மக்கள் முன்னணி பா உ சந்திரசேகரன் ஆகியோர் ரணிலுக்கு ஆதரவான புலிப் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தேர்தலுக்கு இரு வாரங்கள் இருக்கையில் புலிகளின் ராகம் மாறியது. நவம்பர் 4ல் முன்னாள் ஈரோஸ் தலைவரும் தற்போது புலிகளின் சிரேஸ்ட உறுப்பினராகவும் இருக்கும் கா வே பாலகுமாரன் பகிஸ்கரிப்பு பற்றி புலிகளின் குரல் வானொலியில் அறிவித்ததைத் தொடர்ந்து தேர்தல் பகிஸ்கரிப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் அதனை மக்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. வடக்கு கிழக்கில் அளிக்கப்பட்ட வாக்குகள் முழுமையாக ஜக்கிய தேசியக் கட்சிக்கே வழங்கப்பட்டமை இதனையே காட்டுகிறது. புலிகள் மக்களை சரியான வகையில் அரசியல்படுத்தி இருந்தால் மக்கள் அதற்கு செவிசாய்த்து இருப்பார்கள். ஆனால் அது நடக்கவில்லை. புலிகள் ஆங்காங்கே தாக்குதலை வலுப்படுத்தியதால் மக்கள் அச்சம் காரணமாக வாக்களிக்கச் செல்லவில்லை. வோஷிங்டனில் உள்ள Center for Strategic and International Studies (CSIS), இன் தெற்காசியாவுக்குப் பொறுப்பான Ambassador Schaffer இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் "ராஜபக்ஷவின் வெற்றிக்கு பிரதான காரணம், புலிகள் வடக்கு கிழக்குத் தமிழர்களை தேர்தலை பகிஸ்கரிக்கும்படி கூறியது" என்று கூறியுள்ளார்.

புலிகள் இறுதி நேரத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றியமைக்கு அரசியல் காரணங்களிலும் பார்க்க சூட்கேஸ்கள் பரிமாறப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை டிபிஎஸ் ஜெயராஜ் 'Did LTTE have secret deal with Mahinda to enforce boycott ?' என்ற கட்டுரையில் குறிப்பிட்டு உள்ளார். கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் தலைமை அதிகாரியான ரறன் அலஸ் என்பவரே புலிகளுடன், சர்வதேச பயணங்களின் போதும் கிளிநொச்சிக்குச் சென்றும் இந்த இரகசிய ஒப்பந்தத்தை மேற்கொண்டதாக ஜெயராஜ் குறிப்பிட்டுள்ளார். இத்தகவல் அரசியல் வட்டாரங்களிலும் கசிய ஆரம்பித்துள்ளது.

## மீண்டும் இறுதிப் போராட்டம்

'வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள், ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன் வைக்க வேண்டும் என்று இறுதியான உறுதியான அவசர வேண்டுகோள்' விடுவதெல்லாம் வேலைக்காகாது. 'இதனை நிராகரித்து கடும்போக்கை கடைப்பிடித்தால் எமது சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை, தன்னாட்சியை நிறுவும் சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்' என்ற எச்சரிப்பு எப் பலனையும் தரப்போவதில்லை.

புலிகள் தாக்குதலை ஆரம்பித்தாலும் அரசு பதில் தாக்குதலை தொடுப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளது. இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டால், புலிகளைத் திருப்பி அடிப்பதற்குப் பதிலாக இலங்கை அரசு சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி 'சும்மா இருக்க புலிகள் அடிக்கிறாங்கள்' என்று ஒப்பாரி வைத்தால் போதும். ஏனெனில் புலிகளை இராணுவரீதியில் வெல்வதிலும் பார்க்க சமாதானத்தைப் பயன்படுத்தி வென்றுவிடலாம்

> "பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு ஒரு தெளிவான, தீர்க்கமான வரைவிலக்கணம் இல்லாததால் நியாயமான அரசியற் போராட்டங்களும் பயங்கரவாதமாக திரிபுபடுத்தப்படுகின்றன."
>
> **வே பிரபாகரன்** - தமிழீழ விடுதலைப் புலிகள்

என்ற நம்பிக்கை தென்னிலங்கை அரசியல் தலைவர்களிடம் உண்டு. அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மொழியில் சொல்வதானல், 'வெளிநாடுகளுக்கு கூப்பிட்டு அதை இதைக் குடுத்து பாலாவையும் மற்றவயளையும் மடக்கலாம் எண்டு சிங்களவன் நினைக்கிறான்'.

இதையே பிரபா தனது உரையில் நாகரீகமாக 'இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி அரசியல் வெறுமைக்குள் காலம் ஓடியது; இந்த அரசியற் சூனியத்திற்குள், இந்த நிச்சயமற்ற வெறுமைக்குள், எம்மைச் சிக்க வைத்து, போராட்டத்தை திசை திருப்பி மழுங்கடிப்பதே சிங்கள ஆட்சியாளரின் வஞ்சக நோக்கம்' என்றும் 'தொடர்ந்தும் சமாதான மாயைக்குள் செயலற்று இருப்பது அபத்தம்' என்றும் குறிப்பிட்டார்.

அப்படியானால் அடுத்த கட்டம் என்ன? இங்கு தான் புலிகள் குழப்பமான நிலையில் உள்ளனர். 'எமது போராட்ட இலட்சியத்தை அடையும் அணுகுமுறை குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டிய காலத்தை நாம் நெருங்கி விட்டோம்' என்று குறிப்பிடும் பிரபா அந்த புதிய அணுகுமுறை என்ன என்பது பற்றிக் குறிப்பிடவில்லை. அது பற்றிய விரிவான பார்வை அவர்களிடம் இருப்பதற்கான சமிஞைகள் அவரின் உரையில் தென்படவில்லை. ஆனால் அண்மைக்கால நிகழ்வுகள் 'அடியைப் போல அண்ணன், தம்பி உதவா' என்ற பழைய மொழியையே அவர்கள் அணுகுவதாகத் தெரிகிறது.

இன்றும் வெறும் இராணுவ அணுகுமுறையையே மட்டும் நம்பியிருப்பது அழிவுகளையே வேகப்படுத்தும். கால்நூற்றாண்டு கால இராணுவ நடவடிக்கையில் பெற்றுக் கொண்டதையும் இழந்ததையும் ஒப்பிட்டு ஒரு மதிப்பீடு செய்து தமது அமைப்புப் பற்றிய மீளாய்வை அவர்கள் செய்ய வேண்டும். ஒரு காலத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களால் தமிழரின் தாயகப் பகுதிகளில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர். ஆனால் இன்று ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பின் படி ஒரு மில்லியன் தமிழர்கள் கடந்த 20 ஆண்டுகளில் குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையை விட்டு வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து உள்ளனர். வெளிநாடுகளுக்கு செல்ல இயலாதவர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் தென்பகுதியிலேயே வாழ்கின்றனர். மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் பட்சத்தில் தமிழ் மக்கள் தமிழீழத்தை கைவிட்டு புலம்பெயர்வது தவிர்க்க முடியாததாகிவிடும். தனி இராணுவ அணுகுமுறைகள் எதிர் விளைவையே ஏற்படுத்தும். ☐

தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த ஜெயபாலன்

# முஸ்லீம்களின் பிரச்சினை

## பார்க்கவில்லை - கேட்கவில்லை - பேசவில்லை

மாவீரர் நாள் உரையில் முஸ்லீம் சமூகம் பற்றிய நிலைப்பாட்டை வி.புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்வைக்கத் தவறியுள்ளார். சுனாமியால் முஸ்லீம்களும் பாதிக்கப்பட்டார்கள் என்ற ஒரு குறிப்பைத் தவிர அச்சமூகத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. தமது பாரம்பரிய பிரதேசங்களில் இருந்து 15 ஆண்டுகளுக்கு முன் விரட்டப்பட்ட, இன்றும் தமிழீழ எல்லைகளுக்குள் வாழும் கொல்லப்படும் ஒரு சமூகம் பற்றி பிரபா மௌனமாக இருந்துள்ளார்.

மாவீரர் நாளுக்கு முன்னும் பின்னும் முஸ்லீம்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து உள்ளது. கிழக்கில் புட்டும் தேங்காய்ப் பூவும் போல் வாழும் தமிழ், முஸ்லீம் மக்களிடையே வளர்ந்து வரும் பகைமையைத் தணிக்க பிரபா குறைந்தபட்ச கவனத்தையும் செலுத்தவில்லை. இதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் என்று நுனி நாக்கில் அரசியல் பேசி நாங்களே அவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவோம் என்பது பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழர்களைப் பிரதிநிதித்துவதாக கூறுவதற்கு ஒப்பாகும்.

வடக்கு கிழக்கில் அல்லது தமிழீழ எல்லைக்குள் தமிழ் மக்களே பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். முஸ்லீம்கள் சிறுபான்மையினர். தமிழீழ எல்லைக்குள் வாழும் இச்சிறுபான்மையினம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல சமயங்களில் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. ஆகவே தமிழீழ எல்லைக்குள் தங்களுக்கு பாதுகாப்பு இல்லை என அம்மக்கள் அஞ்சுவது முற்றிலும் நியாயமானது. நாம் ஒடுக்கப்பட்ட இனம் என்ற வகையில் இன்னொரு சமூகத்தின் அச்சத்தை புரிந்துகொள்ளும் பக்குவம் எமக்கு வேண்டும். ஆனால் விடுதலை அமைப்புகள் அவர்களைப் புரிந்து கொள்வதற்குப் பதிலாக ஒடுக்கியே வந்துள்ளனர்.

வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தை தமிழர்கள் கேட்கும் போது அதனால் பாதிக்கப்படப் போபவர்கள் முஸ்லிம்களே. கிழக்கில் அவர்கள் 33 சதவீதம் ஏனைய சமூகங்களுக்கு இணையானவர்கள். ஆனால் வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் அவர்கள் 18 சதவிதம் ஆகிவிடுவார்கள். அதனால் அவர்களது அரசியல் பலம் அண்ணளவாக 50 வீதத்தால் குறைகிறது. அதிகாரத்துக்கு வரு முன்னரே தமிழீழ விடுதலைப் போராட்டம் அவர்களை ஒடுக்கி இனச் சுத்திகரிப்பில் ஈடுபட்டால் அதிகாரம் கிடைத்த பின் தங்களின் நிலையென்ன? என்று அம்மக்கள் அஞ்சுவது நியாயமானதே.

அச்சத்தை நீக்கி அவர்களது இதயங்களையும் எண்ணங்களையும் வென்றெடுப்பது இலங்கை இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு மிகவும் இன்றியமையாதது.

முஸ்லீம்களுக்கு எதிரான அனைத்து ஒடுக்குமுறைகளும் புலிகளால் தான் மேற்கொள்ளப்பட்டது என்று கூறிவிட முடியாது. ஏனைய அமைப்புகளுக்கும் அதில் பங்கு உண்டு. இந்திய இராணுவத்துடன் செயற்பட்ட அமைப்புகளும் திட்டமிட்ட முறையில் முஸ்லீம்களுக்கு எதிராகச் செயற்பட்டன. ஆனால் தமிழீழத் தாயகத்துக்குள் தமிழர்கள் பெரும்பான்மைச் சமூகம் என்றளவிலும் அவர்களைத் தாங்களே பிரதிநிதித்துவப்படுத்துவதாக புலிகள் கூறுவதாலும் இந்த இன உறவை வளம்படுத்தும் பொறுப்பு புலிகளின் கைகளிலேயே உள்ளது. கருணா பிரிவை குற்றம்சாட்டி தாம் தப்பிக்க நினைப்பது பிரச்சினைக்கு தீர்வாகாது. அப்படிக் கூறுவது கிழக்கு மாகாணத்தில் புலிகள் பலவீனப்பட்டு உள்ளார்கள் என்ற அர்த்தத்தையே ஏற்படுத்தும்.

மேலும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் முஸ்லீம் சமூகம் சர்வதேச சமூகத்தினால் பாரபட்சமாக நடத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டு முஸ்லீம் உலகில் வலுவாக உள்ளது. இலங்கை முஸ்லீம்கள் திட்டமிட்ட ஒடுக்குமுறைக்கு ஆளானால் இலங்கை முஸ்லீம்களை காப்பாற்றுவதன் மூலம், சர்வதேச அரங்கில் தன் நிலையை மேம்படுத்த இலங்கை அரசு அதனைப் பயன்படுத்தும். இதனைப் பயன்படுத்தி முஸ்லீம் உலகின் மீட்பர்களாக தங்களைக் காட்டிக் கொள்ள அமெரிக்காவும் அதன் தோழமைநாடுகளும் தயங்காது. அது தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு எந்த வகையிலும் உதவாது.

அடுத்த மாவீரர் நாள் வரை காத்திராமல் தமிழ் - முஸ்லீம் உறவை வளர்க்கும் கருத்துக்களை புலிகள் ஊக்குவிக்க வேண்டும். அவை வெறும் நுனிநாக்கு அரசியலாக அல்லாமல் இதய சுத்தியுடன் செய்யப்பட வேண்டும். வடக்கில் இருந்து விரட்டப்பட்ட மக்கள் அங்கு சுத்திரமாக மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். அதற்கு முன் இரு இனங்களிடையேயும் உள்ள அச்சம் நீக்கப்பட்டு பரஸ்பரம் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். தமிழீழ எல்லைக்குள் நாம் பெரும்பான்மை இனம் என்பதால் முதலில் நாம் தான் பெருந்தன்மையைக் காட்ட வேண்டும்.

இன உறவுகளை வளம்படுத்தும் விடயத்தில் புலிகள் மட்டுமல்ல தமிழ் ஊடகங்களின் பங்களிப்பும் மிக இன்றியமையாதது. தங்களை புலிசார்பாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காக புலிகளே தவறென்று ஏற்றுக்கொண்ட விடயத்தை சில ஊடகங்கள் நியாயப்படுத்துகின்றன. முஸ்லீம்கள், போராளிகளின் மறைவிடங்களை காட்டிக் கொடுத்ததால் தான் வடக்கில் முஸ்லீம்கள் வெளியேற்றப் பட்டதாக சிலர் நியாயம் கற்பிக்க முனைகின்றனர்.

ஒரு சிலரின் தவறுக்காக ஒரு சமூகத்தை தண்டிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மட்டு அன்னை பூமியே

காலம் தவறாது கச்சானடிக்க ~ தெங்கு
கன்னி பாளை தள்ளி
இதழ் விரியும் காட்சி எங்கே?

இளவேனில் நிலவினில் நீந்தி விளையாடும்
கயல் மீன்களின்
குதியாட்டம் எங்கே?

நாட்டு கூத்தினில் நர்த்தனம் புரியும்
அண்ணாவி வித்தகர்களின்
மத்தளம் எங்கே?

அம்மானை எங்கே? வசந்தன் எங்கே? ~ உன்
மகுடி எழுப்பும்
மங்கல ஒலி எங்கே?

எல்லாமே வரண்டு போனதுவோ?
இல்லாமல்
தொலைந்து போனதுவோ?

கோரச்சுனாமியிலும் மீண்டு உயிர்த்தெழுந்த ~
எங்கள்
பாடுமீன்கள் கூட
எங்கே ஒழிந்து கொண்டன?

கொலை வெறி கும்மாளம் கொட்ட ~ கொடுமை
சுடலையில் நின்று சிரிக்கிறதே
ஏன்? ஏன்?

ஏனிந்த அமைதி?
ஏனிந்த அமைதி?
இப்படியே சாவதுதான் முடிவா?

இல்லை நிட்சயமாக இல்லை
அப்படியே இருந்தாலும்
அதை நான் நம்ப போவதில்லை.

வந்தாரை வாழவைத்த ~ என்
மட்டு அன்னை
பூமியே!

படுத்தவன் பாயை விட்டெழும்பாது
பரவசம் கொடுப்பவள்
நீயென்பதை நானறிவேன்

என் மட்டு அன்னை பூமியே
வீரம் விளைநிலம்
நீயென்பது உண்மையானால் ~ கிழக்கு மண்
ஈரம் காயாதது என்பதை
நீ எப்படி
நிரூபிக்கப்போகிறாய்?

நாகமுனை வேந்தன்
மட்டக்களப்பு
சூலை 2005

---

எந்த விதத்திலும் நியாயப்படுத்தப்பட முடியாதது. பிரதித் தலைவராக இருந்த மாத்தையா, பிரபாவின் நம்பிக்கைக்குரிய லெப். கேணல் கருணா ஆகியோர் மறைவிடங்களை அல்ல போராட்டத்தையே காட்டிக் கொடுத்தாக வி.புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். அதற்காக வல்வை மக்களையும் மட்டு மக்களையும் தமிழீழத்தை விட்டு விரட்டியடிக்க முடியுமா?

கோஷமிடும் தமிழ்ஊடகங்கள் மறைமுகமாக புலிகளை மிகவும் பலவீனப்படுத்தி உள்ளனர். புலிகள் இன்று தம்மைப் பற்றிய ஒரு பிம்பத்துடன் உள்ளனர். அந்த பிம்பத்தை இந்த தமிழ் ஊடகங்களே ஏற்படுத்தி உள்ளன. அதனூடாக அவர்கள் தம்மைப் பார்க்கும் வரை அவர்களால் தங்களைப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் சர்வதேசம் அந்த பிம்பத்துடன் புலிகளைப் பார்ப்பதில்லை. அதனால் சில நிஜங்களை அவர்கள் விளங்கிக் கொள்ள முற்பட்டுள்ளனர்.

இறுதியாக, பிரபா தனது உரையில், 'சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி சந்திரிகாவினால் கூட சிங்கள இனவாத சக்திகளை மீறி தமிழ் மக்களுக்கு ஒரு அதிகாரமற்ற சுனாமி நிர்வாக நிவாரணத் திட்டத்தைத் தானும் நிறைவு செய்ய முடியவில்லை' என்று குற்றம்சாட்டியுள்ளார்.

ஆனால் அந்த அதிகாரமற்ற சபைக்கே முஸ்லீம் தரப்பை அனுமதிக்க புலிகள் மறுத்தது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதது. அதிகாரமில்லாத சபையையே தங்களுக்கு தர இவர்கள் மறுக்கிறார்கள் என முஸ்லீம் பிரதிநிதிகள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இரு சமூகங்களுக்கும் இடையே புரிந்துணர்வுப் பாலத்தை கட்டியெழுப்புவதன் அவசியத்தை புலிகள் விரைவில் புரிந்துகொண்டு அதற்கு காத்திரமான பங்களிப்பைச் செய்ய வேண்டும். 'நாங்கள் ஆயுதங்களின் மீது காதல் கொண்டவர்கள் அல்லர்' என்ற பிரபாவின் கூற்று களத்தில் நிஜமாக்கப்பட்டு ஜனநாயகத்தின் மீதான புலிகளின் அச்சம் நீக்கப்பட்டால் மட்டுமே புலிகள் தமது அடுத்த கட்ட நகர்வை ஏற்படுத்த முடியும். இல்லையேல் மற்றுமோர் யுத்தச் சூழலுக்குள் வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்கள் சிக்குண்டு போவது தவிர்க்க முடியாதது. □

**தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் தினமும் பாலா அண்ணாவின் பிலாக்கணம்



ரி கொன்ஸ்ரன்ரைன்

லண்டனில் உள்ள அலெக்சாண்டர் மாளிகை மண்டபத்தில் 27.11.05 அன்று இடம்பெற்ற மாவீரர் தின கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம் பேசிய பேச்சு பல தமிழர்களை மிகவும் சங்கடப்படுத்தியதுடன் பல விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்களை வெட்கப்படுத்தியும் உள்ளது. நான் இதை எழுதுவதன் மூலம் ஏதோ பாலசிங்கம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பேச்சை ஆற்றக் கூடியவர் என்றோ அல்லது அவரின் இன்றைய பேச்சு தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஏதோ பெரிய அவமானத்தை ஏற்படுத்திவிட்டதாகவோ பொருளில்லை. இங்குள்ள முக்கிய விடயம் என்னவென்றால் வழமையான பாலா அண்ணையின் லொள்ளு சபாவிலிருந்து இம்முறை இடம்பெற்ற பேச்சு இன்னும் கேவலமாகி உள்ளது என்பதே கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமோ இல்லையோ அல்லது நாம் புலிகளின் ஆதரவாளர்களோ இல்லையோ இன்றைய நிலையில் மாவீரர் தின நிகழ்வுகளையும் அதிலும் குறிப்பாக தலைவர் பிரபாகரனின் பேச்சையும் பல அரசியல் ஆய்வாளர் களும் பத்திரிகையாளர்களும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

மாவீரர் தினத்தில் இடம்பெறும் பேச்சுக்களை மையப்ப டுத்தி பலர் தமிழீழ விடுதலைப் போராட்ட அரசியலை ஆராய்கின்றனர். மாவீரர் தினத்தை உலகத்தின் கண்முன் கொண்டுவந்ததன் வெற்றி தமிழீழ விடுதலைப் புலிகளையே சாரும். மாவீரர் தினத்தை அண்மித்து இடம்பெற்ற பாரிய வெற்றிகர தாக்குதல்கள் தான் முதலில் மாவீரர் தினம் பற்றிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது என்பது இங்கு கவனிக்கப்படடல் வேண்டும்.

அதே நேரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளைத் தவிர ஏனைய இயக்க சக போராளிகளை எவ்விதத்திலும் நினைவு கூராததும் அவர்களின் பங்களிப்பை மதிக்காததும் தமிழீழ விடுதலைப் புலிகளின் குறுகிய அரசியல் மனப்பான்மையையும் வங்குரோத்து மனிதாபிமானத் தையும் கோடிட்டு காட்டுகின்றது. மேலும் இன்று புலிகளுடன் இணைந்தள்ள ஈரோஸ் அமைப்பிலிருந்து உயிர் நீத்த போராளிகளின் பெயர்கள் மாவீரர் பட்டியலில் இடம்பெற்ற போதும் அவர்களும் புலிகளாகவே பதிவு செய்யப்படுகின்றனர் வரலாற்றை தங்களுக்கு ஏற்றபடி edit பண்ணும் இப்போக்கு அப்போராளிகளை அவமதிப்பதாகும்.

மாவீரர் தினம் பற்றிய தத்துவார்த்த விளக்கம் இத்தோடு நிற்க. இனி பாலா அண்ணையின் லொள்ளு சபாவிற்கு வருவோம். என்னைப் பொறுத்தவரை பாலா அண்ணையின் பேச்சு அவருடைய நிலையில் உள்ள ஒருவரிடம் இருந்து எதிர்பார்க்கக் கூடியதில்லை. அதாவது ஒரு மதியுரைஞர், ஒரு ஆலோசகரிடமிருந்து வரவேண்டிய பேச்சல்ல.

தமிழகத்தில் இரு வகையான அரசியல் மேடைகள் உண்டு. கருணாநிதி போன்ற மேல்மட்டத் தலைவர்கள் கலந்து கொள்ளும் மேடைகளில் வரும் பேச்சுக்கள் தமிழ் என்ற இன்பத் தேன் வந்து பாயுது காதுகளில் என்பது போல் அமையும். இன்னொரு வகைப் பேச்சாளர்கள் பணம் கொடுத்து அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் சேரிப்புறங்களில் கூட்டத்தைக் கூட்டி எதிரக் கட்சிகளின் மீது சேற்றை வாரி இறைப்பார்கள். அவர்களுடைய பேச்சில் கம்முனாடி, பிஸ்தா மவ, கிளப்பிட்டு திரியிறனுவ, ஒத்த அப்பனுக்கு பிறந்தவனா போன்ற சொற்கள் சரளமாக வரும். அதில் அரசியல் இராது ஏனெனில் அடுத்த தடவை எதிர்க் கட்சி பணம் கொடுத்தால் அவர்கள் ஆளும் கட்சிக்கு எதிராக கூட்டத்தைக் கூட்டிப் பேசுவார்கள். எங்கட பாலா அண்ணையையும் ரோ தான் கூட்டி வந்ததாச் சொல்லி இருக்கிறார். சிலவேளை அவர் கண்ணம்மா பேட்டையிலும், கொலைகாரன் பேட்டையிலும் couple of weeks தங்கினாரோ தெரியவில்லை. அந்த effect தான் வேலை செய்யுது போல் தெரிகிறது.

ஆனால் அவருடைய பேச்சு 'விசிலடிச்சான் குஞ்சு' களை திருப்திப்படுத்தும் அளவிற்கு சுவாரசியமாக இருக்கவுமில்லை. பலர் பாலா அண்ணையை 'விசிலடிச்சான் குஞ்சு'களின் தந்தை என வர்ணித்து பல கட்டுரைகளை (இன்ரநெற்றில்) எழுதியுள்ளனர். இதில் தத்துவார்த்தரீதியான ஆழமான கருத்து வேறுபாடுகள் உண்டு.

'விசிலடிச்சான் குஞ்சு'களின் தந்தை என்ற பெருமையை 1977ம் ஆண்டு இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் இருந்து எவரும் இலகுவாக தட்டிப் பறித்துவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்விடயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரை வெல்ல எவராலும் முடியாது. 'பறச் சிங்களவனின் தோலில் செருப்பு தைத்து போடுவோம்', 'மொக்குச் சிங்களவன்', 'தன்மானத் தமிழினம் தலை நிமிர்ந்து வாழ அது தன்னைத் தான் ஆழ வேண்டும்' என்ற கூட்டணியினரின் பேச்சுக்க ளுக்கு கிடைத்த விசிலடிகளுடன் ஒப்பிடும் போது பாலா அண்ணையின் ஆதரவு மிகவும் கம்மியாகத் தான் உள்ளது. அதிலும் குறிப்பாக பாலா அண்ணையின் பேச்சை கேட்டு ஒருவரும் அவருக்கு இரத்தத்திலகம் இடவில்லை. இது அனைத்தும் அப்பட்டமான உண்மை. நிலமை இப்படியிருக்க பாலா அண்ணையை 'விசிலடிச்சான் குஞ்சு'களின் தந்தை என வர்ணிப்பது சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் அரசியல் அறிவின்மையையும் ஒரு தெளிவற்ற கண்ணோட்டத்தையும் தான் புலப்படுத்துகின்றது. வேண்டுமானால் நாங்கள் பாலா அண்ணையை 'விசிலடிச்சான் குஞ்சு'களின் step dad என்று சொல்லலாம். அது politicaly correctஆக இருக்கும்.

பாலா அண்ணையை இப்படியேவிட்டால் அடுத்த மாவீர் தினத்தில் தமிழ்செல்வன் வெளிநாடுகளுக்கு வரும் போது சரக்குப் பாக்கிறார், கள்ள காட் போடுகிறார் என்று கூட சொல்லக் கூடியவர்.

பாலசிங்கம் மேடையில் சாளி சப்ளின் போல் நடப்பதற்கு பல காரணங்கள் உண்டு. விடுதலைப் புலிகள் கடந்த 2 வருடமாக சமாதான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இப்பேச்சு வார்த்தையை விடுதலைப் புலிகள் நல்லாகவும் சொல்ல முடியாது. அதே சமயம் தூக்கி எறியவும் முடியாது. ( PLO வின் நிலமை ) அதே சமயத்தில் மீண்டும் முழு நீள யுத்தத்துக்கு போகவும் முடியாது. அதே சமயம் ஆங்காங்கே சுட்டுக்கொண்டு பேச்சுவார்த்தையை தொடர வேண்டிய கட்டாயம் இருப்பதை வெளியிலும் சொல்ல முடியாது. அப்போது எதைத்தான் பாலா அண்ணை பேசுவது. காலநிலை பற்றியா? அதுதான் பாலசிங்கம் பிரக்கடித்த கதைகளும் புலித்தேவன் சொப்பிங் போன கதையும் சொல்கிறார்.

இதுவரை இடம்பெற்ற விடுதலைப் போரில் பதினேழா யிரத்துக்கும் அதிகமான போராளிகள் இறந்து விட்டனர். அதைவிட பல மடங்கு அதிகமாக ஏனைய சக இயக்க விடுதலைப் போராளிகளும் பொது மக்களும் மாண்டுவிட்டனர். லட்சக்கணக்கான மக்கள் தமது உடமை இருப்புகளை இழந்துவிட்டனர். மற்றும் இந்திய மக்களினதும் முஸ்லீம் மக்களினதும் அனுதாபத்தை ஈழத்தமிழர்கள் முற்றாக இழந்து நிற்கின்றனர். மேற்கு நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு தடை இருக்கின்றது. இவை அனைத்திற்கும் மகுடம் வைத்தாற் போல் சுனாமியின் தாக்கம் வேறு.

இன்று யார் விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்களின் எதிர்காலம் என்று ஒன்று இருந்தால் அது விடுதலைப் புலிகளின் கையில் தான் உள்ளது. விடுதலைப் போராட்டத் தில் விடுதலைப் புலிகள் பாரிய இராணுவ சாதனையை புரிந்துள்ளனர். ஆனால் அரசியல் ரீதியில் நிலமை கவலைக்கிடம். அரசியல் ரீதியாக புலிகளை வழிநடத்தும் தலைமைத்துவம் அன்ரன் பாலசிங்கத்துக்கோ அன்றி தமிழ்செல்வனுக்கோ இல்லை. இன்று விடுதலைப் புலிகள் தமது இமேஜ் இனாலும் அதிகாரத்தாலும் மக்களை அணிதிரட்டுகிறார்கள். இந்த இமேஜ் இராணுவ சாதனைக ளால் ஏற்பட்டது. புலிகளின் இந்த இமேஜை மேடையில் சாதிக்கக்கூடிய ஒருவர் கூட தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பில் இல்லை. இது தமிழீழ விடுதலை போராட்டத்தை பாதிக்கின்றது. இன்று கருணாவின் பிரச்சனையால் புலிகளின் பலம் குன்றியுள்ளது. முஸ்லீம்களின் பிரச்சனை வேறு. இவை அனைத்தும் தமிழீழ போராட்டத்தை மிகவும் பாதிக்கின்றது.

லண்டனில் பலர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீவிரமாக பணிபுரிகின்றனர். இவ்வேலைத் திட்டங் கள் தமிழ் மக்களின் போராட்டத்தை தாக்கக் கூடாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோதப் போக்குகளை தமிழ் மக்கள் முன் அம்பலப்படுத்தி வெற்றி காண வேண்டும். அதற்குப் பின்தான் Europian Union உம் High Court உம். மேலும் மாவீரர் தினம் தமிழ் மக்களுக்காக தமது இன்னுயிர்களைத் தந்த போராளிகளின் தினம் அதைநிறுத்துவதற்கு முற்படுவது அரசியல் வங்குரோத்து நிலையையே காட்டுகிறதே தவிர தமிழ் மக்களின் அபிலாஷைகள் மீது அவர்கள் வைக்கும் அக்கறையை அது எவ்விதத்திலும் காட்டவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் எடுக்கும் எவ்வித நடவடிக்கையும் தமிழீழ மக்களை பாதிக்க கூடாது. இதில் கவனம் செலுத்த வேண்டும்.


தமிழீழ விடுதலைப் புலிகளை உலகளாவிய ரீதியில் கொச்சைப்படுத்துவது தான் உங்கள் நோக்கமாக இருந்தால் கவலையை விடுங்கள். அதை பாலா அண்ணை தனித்தே செய்வார். அதை அவரிடம் விட்டுவிடுங்கள். அவர் உங்களை விட படுதிறமாகவே அதைச் செய்கிறார்.

விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோதப் போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் பிரச்சினை என்னவென்றால், இந்த புலி எதிர்ப்பாளர்கள் அதற்காக எந்தப் பிசாசோடும் கூட்டுச்சேரத் தயாராக இருப்பதுதான்.

புலிகளுக்கு எதிர் என்ற ஒரே காரணத்திற்காக, ஸ்ரீலங்கா அரசின் இனவாதத்தை ஆதரிக்கின்ற இந்தப் புலி எதிர்ப்பு கோஷ்டிகள் நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்று இனம்காண மறுக்கின்றனர். உணர்ச்சி வசப்படுகின்றனர். இவர்கள் முதலில் மக்களிடம் நம்பிக்கையைப் பெற முயற்சிக்க வேண்டும். புலிகளை எதிர்பதற்கு காட்டும் ஆர்வத்தை மக்கள் பக்கம் நிறகப் பயன்படுத்துங்கள். ❑

தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எஸ் பாலச்சந்திரன்
அரசியல் ஆய்வாளர்

# இலங்கை அரசியலில் பௌத்தம்

லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் தனது தலைவர் பிரபாகரனின் மாவீரர் உரைக்கு வழக்கம் போல் விளக்கம் அளித்து உரையாற்றினார். அப்போது அவர் தனது உரையில் புத்த மதத்தைப் பின்பற்றும் சிங்கள மக்களை "மேல் வீடு இல்லாதவங்கள்" என்று தனது பாணியில் கிண்டலடித்தார். இதனை அறிந்த சிங்கள இனத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர் என்னிடம்கேட்டார் "அப்படியானால் ஆயுதம் பிடிபடாமல் வந்து இறங்கியதற் காக இந்தியாவில் பழனி முருகன் கோவிலில் இவரின் தலைவர் பிரபாகரன் மொட்டை அடித்து நேர்த்திக்கடன் தீர்த்தாரே. அவர் இயக்கத்தவங்களையும் மேல்வீடு இல்லாத வர்கள் என்று சொல்லலாம்தானே?"என்றார். உண்மைதான்.

புத்தரை கடவுளாக வணங்குவது எந்தளவு முட்டாள் தனமோ அதைவிட பெரிய முட்டாள்தனம் இந்துக்கடவுள் களை நம்பி வணங்குவது. எனினும் அடக்கி ஒடுக்கப் படும் இனம் ஒன்றின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் இயக்கம் ஒன்றின் அரசியல் ஆலோசகர் இன்னொரு இனத்தை இவ்வாறு பகிரங்கமாகக் கிண்டல் செய்து பேசுவது அரசியல் நாகரீகம் அற்ற தன்மையின் வெளிப்பாடே. கூட்டத்திற்கு வந்திருந்த மக்களின் கைதட்டல்களையும் விசிலடிப்புகளையும் பெறுவதற்காக அமையும் இவரின் விளக்கவுரை ஒவ்வொரு வருடமும் வில்லங்க உரையாகவே அமைந்து வருகின்றது.

புலிகளின் ஆலோசகர் பாலசிங்கத்தின் மாவீரர் விளக்கவுரை குறித்து விமர்சனம் செய்து தேசம் சஞ்சிகையின் பெறுமதி மிக்க பக்கங்களையும் தேசம் வாசகர்களின் பொன்னான நேரத்தையும் வீணாக்க நான் ஒருபோதும் விரும்பமாட்டேன். மாறாக இலங்கை அரசியலில் புத்தமதம் குறித்து சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது பயன் மிக்கதாக அமையும் என்று நம்புகிறேன்.

பாலசிங்கம் தனது உரையில் "புத்தர் ஒரு கடவுள் இல்லை. ஒரு இந்துச் சீர்திருத்தவாதி" என்று குறிப்பிட்டார். ஆம் இது உண்மைதான். ஆனால் இந்த உண்மையைப் பல வருடங்களுக்கு முன்னரே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் காலம் சென்ற தோழர். சண்முகதாசன் தெளிவாகக் கூறியிருக்கின்றார். "2500 வருடங்களுக்கு முன்னர் இவ் உலகில் தோன்றிய முதல் பகுத்தறிவுவாதி புத்தர். கடவுள் இல்லை என்று அன்றே அவர் கூறினார்" என்று சண்முகதாசன் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் மாபெரும் வரலாற்றுப் பதிவேடு எனக் குறிப்பிடப்படும் மகாவம்சம் என்னும் நூல் மகாநாம என்னும் புத்தமத குருவால் கி.பி 6ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும். ஒரு மதகுரு வரலாற்று ஆசிரியர் ஆகும்போது மதரீதியான கட்டுக்கதைகள் வரலாறாகப் பதியப்படுகிறது. அதுதான் இங்கும் நடந்தது. புத்தர் தன் வாழ்க்கைக் காலத்தில் மூன்று தடவை இலங்கைக்கு வந்து சென்றார். இவற்றில் ஒரு தடவை சிவனொளிபாத மலையில் தனது கால் பாதத்தை பொறித்துச் சென்றார். புத்தர் தன் மறைவுக்கு முன் இலங்கையின் பாதுகாப்பை சக்கராவுக்கு ஒப்படைத் தார். சக்கரா விஸ்ணுவை அழைத்து தீவின் பாதுகாப்பை அவரிடம் ஒப்படைத்தார். இவ்வாறு பல கட்டுக்கதைகள் இவ் மகாவம்சம் நூலில் வரலாறாகப் பதியப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்தர்களில் பெரும்பாலானவர்களின் இனரீதியான சிந்தனைக்கு இம் மகாவம்ச சரித்திர நூலை உண்மை என்று அவர்கள் நம்புவதே பெரிதும் காரணமாக அமைகின்றது. இருப்பினும் சிங்கள மக்களில் தோன்றிய புத்திஜீவிகள் சிலர் துணிச்சலாக இதை மறுத்து உரைத்திருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். "மகாவம்சம் நூலின் பிரதிகள் அனைத்தையும் எரித்துக் கொளுத்த வேண்டும். ஏனென்றால் சிங்கள பௌத்தர்களின் இனரீதியான சிந்தனைக்கு அவைதான் பெரிதும் பொறுப்பானவை" என்று மதிப்புக்குரிய சிங்கள கல்விமான் டாக்டர்.ஈ.டபிள்யு.அதிகாரம் என்பவர் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுரை சிங்கள வார இதழ் "ரிவிரச"வில் 1983ம் ஆண்டு செப்டெம்பர் 25ம் திகதி வெளிவந்தது. இவர் மட்டுமன்றி இலங்கையின் மிகவும் பிரசித்தி பெற்ற தொல்லியலாளரான டாக்டர்.பரணவிதானவும் போதிய அறிவியல் நோக்குடனும் துணிவுடனும் இந்த மகாவம்ச கட்டுக்கதைகளை மறுத்துரைத்துள்ளார்.

இலங்கையில் புத்த மதத்தைப் புரிந்து கொள்ள அதன் வரலாற்றின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பிளவுகளை அறிந்து கொள்வது அவசியமாகும். முழு மனித குலத்தினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமோசனத்திற்காகப் பாடுபடுவதை பெரிய பிரயத்தனம் (மகாயான) என்றும் தனி ஒருவருடைய விமோசனத்திற்காகப் பாடுபடுவதை தாழ்வான பிரயத்தனம் (கீனயான) என்றும் இரு பெரும் பிரிவுகள் பௌத்த மதத்தில் தோன்றின. புத்த மதத்தின் மகாயானப் பிரிவினர் கூடுதலான சுதந்திர மானவர்களாகவும் முற்போக்கானவர்களாகவும் இருந்தார்கள். துணிவான தத்துவஞானிகள் அவர்களால் கவர்ந்து இழுக்கப்பட்டார்கள்.

மகாவிகாரை தேரவாத (கீனயான) புத்தமதப் பாரம்பரிய பிரிவின் கோட்டையாக விளங்கியது. மகாயான தத்துவத்திற்கு அபயகிரி மடாலயத்தில் ஆதரவாளர்கள் இருந்தார்கள். இவர்களுக்கிடையில் உக்கிரமான வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. கி.பி 215ம் ஆண்டளவில் ஆட்சி புரிந்த வொறக்க திஸ்ஸவின் காலம் தொடக்கம் எதித் தரப்பை எரித்தொழிக்கும் செயல்களும் இடம்பெற்றன. அபயகிரி மடாலயம் வைத்திருந்த பதிவேடுகள் எரித்து அழிக்கப்பட்டன. இவ்வாறு மகாயானப் பிரிவு நசுக்கப்பட்டு கீனயானப் பிரிவான தேரவாதம் துரதிருஸ்டவசமாக இலங்கையில் வெற்றிகண்டது. இதனால் இலங்கையில் புத்த மதத்தில் சீர்திருத்தம் நசுக்கப்பட்டது. இதனால்தான் இலங்கையில் புத்தமத சிந்தனையிலான அறிவு ரீதியான தேக்கம் ஏற்பட்டது.

இலங்கை அரசியலில் புத்தமத குருமார்களின் பாத்திரம் இடைக்கிடையே ஆக்கபூர்வமாக இருந்துள்ள போதும் பெரும்பாலும் எதிர் மறையாகவும் பிற்போக்கானதாகவுமே இருந்து வந்துள்ளது. சில குறிப்பிட்ட புறநடைகள் இருந்து உள்ள போதும் புத்த குருமார் கல்வி அறிவற்றவர்களாகவும் அறியாமையானவர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்கள் சிங்களம் தவிர வேறு எந்த மொழிகளையும் கற்பதில்லை. அவர்கள் குறுகிய மனப்பான்மையுடையவர்களாகவும் ஒற்றைப் போக்கு உடையவர்களாகவும் வெளி உலகைத் தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். புத்தமதம் என்றால் அது சிங்களவர்களுக்கே உரியது என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

இதனாலேயே மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் பண்டாரநாயக்கா அவர்களையே சுட்டுக் கொன்றார்கள். அத்துடன் இனக்கலவரங்களின் போது சில புத்தமத குருமார்கள் தமது மஞ்சள் நிற அங்கியை உயர்த்திப் பிடித்த வண்ணம் வெறிபிடித்த கும்பலுக்கு தலைமை தாங்கிச் சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

கொழும்பு வஜிராம விகாரையின் பிரதான குருவான மடிகெபன்னசீக என்பவர் 1982ம் ஆண்டு செப்டெம்பர் 15ம் திகதி இந்தியாடுடே சஞ்சிகைக்கு பின்வருமாறு பேட்டியளித்தார். "எமது விருந்தோம்பல் காரணமாக தென்னிந்தியாவில் இருந்து வந்த படையெடுப்பாளர்களான தமிழர்களை இங்கு தங்க அனுமதித்தோம். எங்கும் வாழவும் அனுமதித்தோம். எங்களுடன் திருமணம் செய்யவும் அனுமதித்தோம். ஆனால் அவர்கள் வடக்கு கிழக்கில் 261 புத்தமத விகாரைகளை அழித்துள்ளார்கள். அவர்கள் லட்சக்கணக்கில் கொழும்பில் வாழுகிறார்கள். ஆனால் வடக்கில் இருக்கும் ஒரு சில ஆயிரம் இராணுவத்தை வெளியேறும்படி கேட்கின்றனர். இது என்ன நியாயம்?" என்று கேட்டுள்ளார். இதன்மூலம் அவர்களின் சிந்தனை ஓட்டத்தை புரிந்துகொள்ள முடியும். இதுதான் அவர்களின் புத்தமத பக்தியும் கருணையும்.

இலங்கையில் உள்ள புத்தமத குருமார்கள் புத்தர் போதித்தவாறு உலோகாயுதப் பொருட்கள் அற்ற எளிய வாழ்க்கையை வாழவில்லை. கிராமங்களில் இருந்த ஏழைப் புத்த குருமார்கள்தான் இதற்குப் புறநடையாக இருந்தார்கள். ஆனால் பல புத்த குருமார்கள் சுரண்டல்கார செல்வந்தர் களாக இருக்கின்றார்கள். இலங்கையின் புத்தமதத்தின் வரலாற்றில் ஆரம்பத்துடனேயே இது தொடங்கிவிட்டது.

வாலகம்பாகு காலந் தொட்டே(கி.மு103-102, கி.மு 89-77) சிங்கள மன்னர்கள் மடாலயங்களுக்கு நிலத்தை தானம் செய்யும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இது புத்தமதக் கோட்பாடுகளுக்கு நேர்விரோதமானது. வாலகம்பாகு தான் நாடு கடந்திருந்த போது தனக்கு உதவி செய்த புத்த குருமார்களுக்கு வெகுமதி வழங்க இந்தப் பழக்கத்தை கடைப்பிடித்தார். அதன்பின் சங்க ஆதரவைப் பெற மற்ற மன்னர்கள் இந்தப் பழக்கத்தை தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். பொருளாதார நலன்களை சங்கவுக்கு அளித்ததால் அதன் எண்ணிக்கை பெருகியது. சங்க உறுப்பினர்களுக்கு நல்ல வசதியான வாழ்க்கை உத்தரவாதமாகியது. புத்தரின் போதனைகளுக்கும் இதற்கும் வெகுதூரம். ஆனால் மகாயானப் பிரிவினர் ஒருவகை உற்பத்தி உழைப்பில் ஈடுபட்டார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த அரசியல் கட்சிகள் யாவும் தமது பதவி நலன்களுக்காக சுயநல அரசியலுக்காக சிங்கள பௌத்த கோஸத்தை ஊட்டி வளர்த்தன. இதனால் கால ஓட்டத்தில் பௌத்த குருமார்கள் நேரடியாக அரசியலில் குதித்தனர். ஆனால் சிங்கள மக்கள் அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற அனுமதிக்கவில்லை. நான்காவது இடத்தையே அவர்களால் பெறமுடிந்தது.

ஆலோசகர் பாலசிங்கம் குறிப்பிட்டது போன்று சிங்கள மக்கள் அனைவரும் மேல்வீடு இல்லாதவர்களாக இருந்திருப்பின் இன்று புத்த பிக்குமாரின் கட்சியே ஆட்சியைக் கைப்பற்றி இருக்கும். ஒரு புத்த பிக்குவே ஜனாதிபதியாக வந்திருப்பார். ஆனால் சிங்கள மக்கள் அவ்வாறு நிகழவிடாமல் தடுத்து நிறுத்தி நம்பிக்கை ஊட்டியுள்ளார்கள். இது ஒரு நல்ல விடயம்.


*இருப்பினும் மதத்தை அரசியலில் இருந்து பிரிக்காவிட்டால் இலங்கைக்கு எதிர் காலம் கிடையாது. இது பௌத்த மதத்திற்கு மட்டுமல்ல இந்து, முஸ்லிம் மதங்களுக்கும் பொருந்தும்.* ☐

*தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜி

# வீட்டிற்குள் ஒரு வ




படம் : பொலிசாரின் விளம்பரம்

இலங்கையில் உருவாகிய அரசியற் போராட்டம் தமிழ் சமூகத்துக்குள் கொண்டுவந்து சேர்த்த விடயங்களில் புலம் பெயர்வு ஒன்றாகும். எழுபதுகளின் இறுதிப் பகுதியிற் தொடங்கிய இந்த புலப்பெயர்வு என்பது, தொன்னூறுகளில் உச்சம் பெற்று தற்போத மந்த கதியை அடைந்துள்ளது. இக்காலப் பகுதிகளில் ஆண்கள் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என்று எந்த வேறுபாடு இன்றி அனைத்துத் தரப்பும் புலம் பெயர்வுப் பொறிக்குள் சிக்கிக்கொண்டனர்.

இதில் குறிப்பாகப் பெண்களை எடுத்துக்கொண்டால் யுத்த சூழ்நிலையானது வாழமுடியாத அடிப்படைப் பிரச்சி னையாக இருந்தாலும், அதிகளவு பெண்கள் திருமணத்தின் பொருட்டும் புல பெயர்ந்துள்ளார்கள். யுத்த ஒடுக்கு முறைகளில் இருந்து தப்பிச் கொள்ளும் வரப்பிரசாதமாக புலம்பெயர்வு இருந்தது என்பதில் மிகையில்லை. எனினும் இந்தப் புலம்பெயர்வு பெண்களை சந்தோஷமாகவும் திருப்தியாகவும் வாழவைத்துள்ளதா என்றால் இல்லை என்றே பதிலளிக்க வேண்டியுள்ளது. வெளிநாட்டுக்கான பயணத்தில் இருந்து குடும்பவாழ்வு வரை பெண்களின் நிலை துயர் மிகுந்த ஒன்றாகவே இருந்து வருகின்றது.

## சம்பவம் 1:

தொன்னூறுகளின் இறுதிப் பகுதியில் தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்த பெண்ணொருவர் ஆப்பிரிக்காவை அடைகின்றார். அவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்குப் பொறுப்பெற்ற ஏஜென்ட் கொடுத்த பாலியல் ரீதியான நிர்ப்பந்தங்களைத் தாங்கமுடியாமல் அதிலிருந்து தப்பிக்கும் வழி தேடுகின்றார் அந்தப் பெண். அங்கு தனது ஏஜென்டையே திருமணம் செய்துகொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறார். வெளிநாட்டுக்கு விரைவாக வரவேண்டும் என்றால் ஏஜென்டுகளின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்தாலே முதலில் வெளியேற முடியும் என்ற நிலையில் அங்கு பல பெண்கள் சிக்குண்னர். அதிலிருந்து தப்பி 2000ம் ஆண்டளவில் ஏஜென்டையே மணம் செய்து இங்கு அந்தப் பெண் வரும்போது, அவரின் முடிவை விளங்கிக் கொள்ளாத உறவினர்கள் அவரை வெறுத்து ஒதுக்குகின்றனர்.

இந்நிலையில் அந்தப் பெண் தான் தெரிவுசெய்தவருடன் வாழத் தொடங்குகின்றாள். இங்கு அவருக்குக் கணவனால் சித்திரவதைகள் தொடங்குகின்றன. சூழ்நிலை நெருக்கடி தவறான ஒரு ஆணுடன் வாழும் நிலைமையை ஏற்படுத் தியதால் அடியும் உதையும் பெறுகின்றாள். மாடிப் படிகளில் இருந்து தள்ளி வீழ்த்தப்பட்டு கருக்கலைப் பிறகும் உள்ளாகின்றாள். குடும்ப வாழ்வு கேள்விக்குறியாகிய நிலையில் அவரது அகதி அந்தஸ்துக் கோரிய விண்ணப் பமும் நிராகரிக்கப்படுகின்றது. நிர்க்கதியாகிய நிலையில் அவரின் பிரச்சினைக்கு உதவி தேடி ஒரு தமிழ் அமைப்பின ரிடம் போனபோது அவரது விவகாரம் ஒரு கிசுகிசுவாகி, சுவாரஸ்யமான கதையாகப் பேசப்பட்டு அவரை மேலும் உளரீதியாகத் துன்புறுத்தியது. இப்போது அந்தப் பெண் கணவனை விட்டுப் பிரிந்து தமிழ் அல்லாத பொது அமைப்பிடம் அடைக்கலமாகியுள்ளார்.

## சம்பவம் 2:

பெண் குடிப் பழக்கம் நிறைந்த கணவனால் ஒன்பது தடவைகள் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் தென்மேற்கு லண்டன் ரூற்றிங்கில் இடம்பெற்றது. இருப்பினும் அவர் பொலிஸாரின் உதவியை நாடவும் இல்லை, வாக்குமூலம் கொடுக்கவும் இல்லை. பிள்ளை கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே கணவன் கைது செய்யப்பட்டு சென்ற வருடம் 9 ஆண்டுகள் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.

மரணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையிலும் அந்த மனைவி, தன் கணவனை நேசிப்பதாகவும் அவரை வீட்டிற்குக் கூட்டிச்செல்ல விரும்புவதாகவும் தெரிவித்து உள்ளார். அவர் ஏன் அப்படிக் கூறுகின்றார்? தனது உயிரை இழக்கும் அபாயத்தைச் சந்தித்த பின்னரும், கணவன் இல்லாமல் இந்தச் சமூகத்தில் வாழ்வதை தர்மசங்கடமாக எண்ணுகின்றாரா?

இந்தப் பிரச்சினை பற்றி ஒரு ஆணிடம் கருத்துக் கேட்ட போது, அந்தப் பெண், புருஷன் கத்தியால் குத்தும் அளவிற்கு மன்னிக்க முடியாத ஏதோ பிழை செய்திருக்க லாம் என்றும் அதை (கத்தியால் குத்தியதை) அந்தப் பெண் நியாயம் என்று உணர்ந்து சேர்ந்து வாழ விரும்பியிருக் கக்கூடும் என்றும் பதிலளித்தார்.

சமூகக் கருத்தியலில் பெண் ஒரு பொருட்டாக மதிக்கப் படுவதில்லை. இத்தகைய சிக்கல் நிலையில் உள்ள பெண்களைப் பாதுகாக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கல் நையாண்டி செய்து உளரீதியாகப் புண்படுத்தாமல் வாழவிடவும் கூடியதான உயர்ந்த நிலைமைக்கு எமது சமூகம் எப்போது செல்லும்?

சம்பவம் 3:

இவை எல்லாவற்றையும் விட அண்மையில் ஒக்ரோபர் இறுதிப் பகுதியில் ஜேர்மனியில் மூன்று குழந்தைகளின் தாயான சுமார் 50 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தனது கணவனால் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஜேர்மனிக்கு வந்து ஐந்து, ஆறு மாதங்களே ஆகியிருந்தன. ஒரு வருடம் கணவனுடன் சேர்ந்து வாழ்ந்தாலே ஜேர்மன் பிரஜாஉரிமை கிடைக்கும் என்ற நிலையில் தனது கணவனின் நாளாந்தக் கொடுமைகளைச் சகித்து வாழ்ந்து வந்துள்ளார்.

கொலையாளி அச்சமயம் போதையில் இருந்ததாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். தனது மனைவியைக் கொன்றுவிட்டு வீட்டுக்கு வந்து, தாயைத் தேடிய பதினொரு வயதுச் சிறுவனையும் கொலை செய்ய அவர் முயன்றுள்ளார். சத்தம் கேட்டு பக்கத்து வீட்டு ஜேர்மானியர் பொலிசாரை வரவழைத்துள்ளார். கழுத்து நெரிக்கப்பட்டு மயக்கமாகிய சிறுவனை விட்டுவிட்டு ஓடிய கொலையாளியான கணவன் பொலிசில் சரணடைந்து, தண்டனை பெற்றுள்ளார்.

இவை எமக்குத் தெரியவந்த ஒருசில உண்மைகளாகும். எனினும் இங்கு இத்தகைய வன்முறைக் குற்றங்கள் அதிகரித்து வருவதாக பிரித்தானியப் பொலிஸ்துறை தெரிவிக்கின்றது. 2003/2004ம் ஆண்டுப் பகுதிகளில் 106,000 குற்றச் சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டன எனவும் இதில் குடும்ப வன்முறைகள் இருபத்தி நான்கு வீதமானவை எனவும் அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது. மேலும் லண்டனில் இடம்பெறும் கொலைகளில் 25 வீதமானவை குடும்ப வன்முறையுடன் தொடர்புபட்டவை எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. குடும்ப வன்முறைகள் மிக ஆபத்தான நிலையை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தக் குடும்ப வன்முறையில் பாலியல் துஷ்பிரயோகம், கருத்தரிப்பு, குழந்தைப்பேறு, கலாச்சாரப் பிரச்சினைகள், பிரிந்து வாழுதல், போன்றன அடங்குகின்றன. நமது சமூகத்துள் ஒரு பகுதிப் பிரச்சினைகள் அறியப்பட்டும் பெரும்பகுதி மறைக்கப்பட்டும் உள்ளன. இங்குள்ள பெண்கள் இந்த நாடுகளிற் கிடைக்கக் கூடிய சட்டப் பாதுகாப்பையும் பொருளாதார உதவிகளையும் சரிவரப் பயன்படுத்தத் தெரியாதவர்களாக அல்லது விரும்பாதவர் களாகவே அதிகளவில் உள்ளனர்.

எது எப்படி இருப்பினும், பெண்கள் மீதான காலம் காலமாக ஏற்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள்: பெண் வலிமையற்றவள், மென்மையானவள், அடக்கமானவள், அறிவற்றவள், ஏமாறக் கூடியவள், இலகுவில் தவறு செய்யக்கூடியவள் எனவும் பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற சமூகத்தின் எதிர்பார்ப்பும், நிச்சயிப்பும் பெண்கள் அனுபவிக்கும் துயரங்களுக்குக் காரணமாய் அமைகின்றது.

மறுபுறம் பொருளாதார நிலைமைகள், அதன் மீது கட்டப்பட்டுள்ள கலாச்சார பண்பாட்டுக் கூறுகள், அவற்றை மாற்றி அமைக்கப் போராடாத அரசியல் என்பன இருக்கும் வரை இவை தொடரத்தான் போகின்றன. பெண்ணவள் மனிதகுலத்தின் தவிர்க்க முடியாத ஒரு பகுதி. உழைக்கவும் சிந்திக்கவும் இயலுமானவள். பெண்ணின் உடலியற் கூறுகள் அவளின் பலவீனமல்ல. அதுவே அவளின் பலம். அது இயற்கையின் முடிவு என்ற இன்னோரன்ன உண்மை களை உணரவும் ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லாதவரை திரும்பத் திரும்ப அவை நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.□

## பிரித்தானியாவில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் நிறுவனங்களும் அவற்றின் தொடர்பு இலக்கங்களும்

Tamil Women Development Forum - 020 8546 1560
Southall Black Sisters - 020 8571 9595
Asian Women's Resource Centre - 0208 961 6549
0208 962 5701
Advice Line - 0208 838 3462
ASHA Project - 0208 696 0023
National Domestic Violence Help Line - 0808 2000 247
Force Marriages Abroad - 0207 008 0230
0207 008 0135
0207 008 8706

Women's Aid 24 Hour Helpline - 0800 917 1414
Northern Ireland Women's Aid 24 Hour Domestic Violence Helpline - 028 9033 1818
Scottish Domestic Abuse Helpline - 0800 027 1234
Wales Domestic Abuse Helpline - 0808 8010 800

ஆண்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டு இருந்தால் அல்லது அவரது சார்பில் யாரவது பேச விரும்பினால் தொடர்புகளுக்கு:
Male Advice & Enquiry Line, 0845 064 6800

Refuge Workers Weekdays 9.00am to 5.00pm [illegible] • Weekdays after 5.00pm [illegible] • Weekends / Bank holidays [illegible]
Outreach Worker Weekdays 9.00am to 5.00pm [illegible] • [illegible] • Fax [illegible]

தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெ.ஜென்னி
பாரிஸ்

# பெண்விடுதலையின் யதார்த்தம்

அன்புள்ள தோழிக்கு,

இந்தப் புகலிடச் சூழலில் உன்னிடமிருந்து நான் இந்தப் பதினைந்து வருடங்கள் அந்நியப்பட்டிருந்தேனோ என எண்ணி இதைத் தொடர்கின்றேன். இதனை என் இழப்பென்று சொல்வதா, அன்றி நான் உன்னை எட்ட நின்று அவதானித்து என்னுள்ளும், வெளியேயும் என்னைத் தேடினேனோ என்பதனைத் தொடரும் இந்த மடல் தான் தெளிவுறுத்தும்.

இந்தப் புகலிட வாழ்வியல், கடந்த காலங்களில் எமக்கு முரண்பாடுகளுடன் கூடிய வாழ்வையும் வழிநிலையையும் வகுத்துத் தருகின்றன. ஒன்றில் நாம் எம்மை தக்கவைத்துக் கொண்டோமா அல்லது தளைத்து நின்று வெல்கின்றோமா, அன்றி எட்டநின்று அந்நியப்படுகின்றோமா என அராய வேண்டி உள்ளது.

நாம் எம் தளத்திலிருந்து புலம்பெயர்ந்து இன்று 54 நாடுகளில் சிதறுண்டு வாழ்ந்தாலும் எம்முள் உள்ள சிறு பொறிகளாயினும் என்றும் கனன்று கொண்டுதான் உள்ளது. இதில் மனிதநேயத்தை வலுப்படுத்தும் சமூகக் கண்ணோட்டத்துடன் போராடும் எமது நாளாந்த வாழ்வும், தேடலும், வாசிப்புகளும், கலந்துரையாடல்களும் பல்வேறு தளங்களில் நின்று எம்மை வளம்படுத்தி உள்ளன. அதேவேளை இந்த வளர்ச்சியானது எம் சமூக ஓட்டத்துடனான சமூக வளர்ச்சியா அல்லது எம் சமூகத்தை விட்டுவிட்டு கோட்பாட்டு ரீதியில் மட்டும் நாம் எம் சிந்தனையை மேற்குலக கலாச்சார சமூக வளர்ச்சிக்குள் பிரதியிட்டு அதற்குள் மூழ்கடிக்கப் படுகின்றோமா என்பது ஒரு பெரும் கேள்வியாய் உள்ளது.

இவற்றிற்கெல்லாம் மேலாக இந்த முரண்பாட்டு வளர்ச்சியே தெரியாமல், எந்தவித சமூக அக்கறையுமில்லாமல் எம்மில் கணிசமானவர்கள் புகலிடச் சூழலைப் பயன்படுத்தித், தான் தனது குடும்ப உறவு மட்டும் என்ற குறுகிய வட்டத்தினுள் இயங்கித் தம் வாழ்வை ஸ்திரப்படுத்தி வாழும் நிலையும் தொடர்கின்றது.

மொத்தத்தில் எம்மவரின் இந்த முக்கோண கட்ட வாழ்வியலின் சூழல்தான் என்ன? இது எங்கு போய்த் தரித்து நிற்கப்போகின்றது ? அல்லது எங்கோ சென்று முட்டிமோதிச் சிதறுண்டு சீரழிந்த கலாச்சாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தப் போகின்றதா ? என்பவையெல்லாம் இன்று தொடரும் கேள்விக்குறிகளே.

என்றும் சமூகத்தின் அரைப்பங்கு பெண்களாகிய நாம் எந்த நிலையில் இருக்கின்றோம், இதில் பெண்களின் பங்கு தான் என்ன? சமூகத்தின் மறுபாதி அங்கமான ஆண்களுடன் எமக்குள்ள பரஸ்பர நிலைமைகள் என்ன? என்பவைகள் ஆராயப்பட வேண்டியவைகளே.

தோழி,

இப்படிப் பல முரண்பாடுகள், அலசல்கள் மத்தியில் நாம் வாழ்ந்தாலும் இன்று முக்கியமான எமது சமூகத் தளங்களில் பெண்களாகிய நாம் எங்கே நிற்கின்றோம்? இந்த சமூக ஓட்டத்தில் எப்படி நகர்கின்றோம் அல்லது நகர்த்தப்படுகின்றோம் எனச் சிறிது உன்னுடன் மனம்திறந்து மடல் எழுத விழைந்துள்ளேன்.

எமது கடந்த கால 25 வருடப் போராட்ட வரலாற்றில், சமூகமயப்படுத்தப்பட்ட போராட்ட வடிவத்தில், குறிப்பிடத்தக்க பெண்கள் தமது இருப்பு, வீடு, உறவுகளைத் தாண்டி புறப்பட்டு முதலில் சமூக வேலைத்திட்டங்கள், பின் அதனூடாக அரசியல் - இராணுவம் எனத் தனது சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் வளர்த்தெடுத்து, இதற்குள்ளும் குறிப்பிடத்தக்க நிலையில் சர்வதேசப் போராட்ட விடுதலைப் பாதைகளை படித்தும் பகுத்தாராய்ந்தும் படிமுறையில் வளர்ந்துவந்துள்ளோம். இந்த வளர்ச்சி வேகம் செயற்பாடு, கருத்தாழும் என்பன தாம் நிற்கும் தளத்திற்கு அல்லது ஒரு அமைப்பு வடிவத்திற்குள் வேறுபட்டாலும், இச்சமூகத்தினால் கவனிக்கப்படும், இச்சமூகத்தைக் கொண்டிழுக்கும் பாரிய சமூகக் கடமையை செயற்படுத்துவதிலும் ஒன்றிணைந்தோம்.

இதே நிலையில் சமூகத்தின் மறுபாதி அங்கமான ஆண்களுடன் பரஸ்பர வேலைத்திட்டங்களில் இணைந்து செயற்பட்டோம் என்பது எமது வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் தெரிவதே. இந்தச் சமூகப் பங்களிப்பில் முற்றுமுழுதாகப் பங்குகொண்ட பெண்கள், இரண்டாவதாக ஆதரவாளர்கள் அல்லது பார்வையாளராய் இருந்த பெண்கள், மூன்றாவது எந்தவிதமான சமூக அக்கறையுமில்லாத பெண்கள் என்று இவர்கள் அனைவருக்குமான ஒரு பொதுப் பிரச்சினை உள்ளது. அதுதான் பெண் விடுதலை அல்லது பெண் சமத்துவம் என்பது.

இதில் கூட நாம் அன்று கூர்மையடைந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும்போது அனைத்து அடக்குமுறைக்குமான உடைத்தெறிதலையும் ஒன்றிணைந்து இப்போராட்டத்தினூடே நகர்த்தினோம். அது தவிர்க்க முடியாத வரலாற்றுக் கட்டமும் தான். ஆனால் கடந்த அனுபவங்கள் எமக்கு பல படிப்பினைகளைத் தந்தது. ஏனெனில் எமது இந்த தேசிய விடுதலைப் போராட்டமானது சர்வதேசிய அரசியலாக்கப்பட்ட போதும், நாமும் எமது சிந்தனைகளும் பன்முகத் தேடலினூடாக பரவலாக்கப்பட்ட போதும், நாம் எமது பாதைகளைத் தீவிரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து புதிய பரிமாணங்களை உள்வாங்க வேண்டிய தேவைக்குட்படுகின்றோம். இந்த உள்வாங்கலில் தான் நாம் இன்று கோட்பாடு, சமூகக் கட்டுமானம், சூழல் சார்ந்த வாழ்வியலுக்கான வரை முறைகள் என இதனூடான ஒரு சமூக ஓட்டத்தினுள் உழலகின்றோம்.

இதில் பெண்களாகிய நாம் நிறையவே சிந்திக்க வேண்டிய நிலைக்குத் தற்போது தள்ளப்படுகின்றோம். அங்கு ஒரு கலாச்சாரம், பண்பாடு, தேசிய விடுதலைப் போராட்டமென ஒருமுகப்படுத்தப்பட்ட நாம், இங்கு பல கலாச்சாரம், உலகமயமாக்கல், மேற்குலகத் தத்துவார்த்த சிந்தனை கோட்பாடு என பல முகாந்தரங்களாக சிதறிக் கிடக்கின்றோம். இதில் கடந்த இரு தலைமுறைக் கூடான முரண்பாடுகளுடன் போராடுகின்ற நிலையில், இங்குள்ள சூழலின் அடிப்படையில் 3ம்-4ம் தலைமுறைகளை வழிநடத்த அல்லது வழிகாட்ட, கலாச்சாரத்தினூடாக சமூக ஓட்டத்தினுள் தத்தளிக்கின்றோம். இங்குதான் நாம் எங்கு போக வேண்டுமென்ற வரையறுக்கப்பட்ட வரலாற்றுப் படிமுறையை உணர வேண்டி உள்ளது.

ஏனெனில் அன்று தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு முகப்படுத்தப்பட்ட சமூக பொருளாதார அரசியல் கலாச்சார பண்பியல். மனிதநேயம் அனைத்தும் இன்று தேசிய விடுதலைப் போராட்டம் வேறு பரிமாணங்கள் எடுக்கும் வரலாற்று (இயங்கியல்) தேவையை முகம்கொடுக்கும்போது அதன் கூறுகளை அவரவர் தத்தமது கொள்கை, கோட்பாடு களின் அடிப்படையில் கையில் எடுத்து முன்னெடுக்கிறார்கள். அல்லது அதனைத் தமது கருத்தியலாக்கிக் கொள்கிறார்கள்.

இவ்வாறான இத்தளங்களில் தான் தத்துவத் திற்கும் நடைமுறைக்குமுள்ள முரண்பாடுகளையும் புரிந்துகொள்ள முடியாமல், தமது வர்க்கம் சார்ந்த அல்லது மேற்குலக மேற்குடிக் குணாம்சங்களை உள்வாங்கி, அதனை அப்படியே சமூகத்தில் வெளிப்படுத்துகின்ற கோட்பாடுகள் மட்டுமான பத்திஜீவித்தன்மையாக தம்மைக் காட்டிக்கொண்டு வலம்வரும் தன்மையும் தெரிகின்றது.

ஒரு பக்கம் பார்த்தால் நாம் வாழும் எம்மவர் மத்தியினூடாக, சமூகத்தையும் கட்டி இழுத்து அதனூடு அவர்களிடமிருந்தும் முக்கியமாக ஆண்பாலர்களிடமிருந்தும் அந்நியப்படாமல் எம் சமூக ஓட்டத்தினூடாக எமது கருத்தியலை நடைமுறையில் வென்றெடுப்பதுவும் மறுபுறத்தில் எமது சராசரி மக்களுக்கு விளங்காத மொழிகள் அல்லது மேற்குடிக் கோட்பாடுகள் அல்லது சமூக பொருளாதார பிரச்சினைகளின் அடித்தளங்களை கண்டறிந்து களையமுற்படாமல், சமூகப் பிரச்சினைக்குரிய கூறுகளை இன்னும் இன்னும் புதிய புதிய சொற்பதங்களைப் பாவித்து தனித் தனியே கூர்மைப்படுத்தி, திரிபுவாதங்களுக்குள் மூழ்கடிக் கப்பட்டு எம்சமூகத்திடமிருந்து அந்நியப்படுவது தெரிகின்றது.

எனவே இந்த புகலிடச் சூழலிலுள்ள நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கூடாகவும் எமது சமூகத்தைப் பற்றிச் சிந்திப்பவர்கள்கூட ஒரு குறிப்பிடத்தக்க பங்கினரே. இதற்குள்ளேயே கோட்பாடுகளும் நடைமுறைகளும் குறைந்தபட்சமாவது ஒருமுகப்படுத்தப்படாத நிலையில் வெறுமனே ஆரோக்கியமற்ற விமர்சனங்களுடனும் அல்லது அதற்கும் அப்பால் கருத்தியல் மூலம் தனிநபர் தாக்குதலாகவே நடைபெறுவது கண்கூடு.

இயங்கியலின் தத்துவமே முரண்பாடுகளின் வளர்ச்சியாயினும் இது பகை முரண்பாடாகப் பரிணமிக்கும்போது பலவிதத்திலும் சமூகத்தின் ஓட்டம் தேக்கமடைகின்றது. அல்லது சமூகத்திலிருந்து தூக்கியெறியப்படுகின்றது.

நாம் வாழும் சூழலில் மக்களோடு மக்களாக வாழ்ந்து அந்தந்தப் பிரச்சினைகளை புரிதலுடன் பகிர்ந்துகொள்வதன் மூலமே எந்த சமூக மாற்றத்தையும் கொண்டிழுக்க முடியும்.

நாம் இங்கு வாழும் சூழலுக்கு பொருத்தமற்ற கோட்பாடுகளை உடனடியாக பிரதிநிதித்து வப்படுத்த முற்படுவதால், சராசரி சமூக அக்கறையுள்ளவர்க ளும் இவர்களிமிருந்து ஒதுங்குவது மட்டுமல்லாது, இச்சூழலிலுள்ள எமது சமூகத்தினரையும் நாம் ஒரு ஆரோக்கியமான சமூக ஓட்டத்திற்கு இட்டுச்செல்வதிலும் பல பின்னடைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

எனவே தோழி,

சகல மட்டத்திலும் வளர்ச்சியடைந்துள்ள இந்நாடுகளில் வாழும் நாம், சராசரியாக 15 வருடங்களே இங்கு இடம் பெயர்ந்து, எம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில் திடீரென இந்நாட்டு கலாச்சாரம், பண்பியலை ஒரு பாய்ச்சலுடன் உள்வாங்குவோமானால், படிமுறை வளர்ச்சியை மறுதலித்த ஒரு சமூகமாகத்தான் நாம் இருப்போம்.

எனவே நடைமுறைகளுக்கூடாக நாம் மற்றவர்களை வென்றெடுப்பதும், எம் யதார்த்த வாழ்வில் இச்சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு கருத்தியலினூடாக அவர்களை வெல்வதுமே எமது செயற்பாடாக அமையவேண்டும்.

இது வெறும் கோட்பாட்டாளர்களால், நாம் பிற்போக்கு வாதிகள் எனப் பார்க்கப்பட்டாலும், எமது நிலைப்பாடு எம் குறிக் கோளை முன்நிறுத்தி இந்த ஆரோக்கியமான சமூக மாற்றத்தை முன்னெடுப்போமானால் அதுவே எம் வெற்றி. ஏனெனில் இயங்கியல் என்பதே படிமுறை வளர்ச்சிதான் என நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. சமூகத்துள் கற்றலும் கற்பித்தலும் எமது செயற்பாடுகளானால் இதனை மனிதநேயத்துடன் ஒரு சமூக மாற்றத்தை நோக்கி முன் னெடுப்போம். மேலும் உன்னிடம் நான் பல விடயங்களைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன். இவை பற்றிய விமர்சனம், பகிர்ந்தாடல்களை உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறேன். ☐

தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ் பாலச்சந்திரன்

# மீண்டும் பெண் விடுதலையை நோக்கி

அண்மையில் லண்டனில் பெண்கள் சந்திப்பு ஒன்று நடந்து முடிந்தது. மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல் பெண்கள் சந்திப்பு முடிந்துவிட்டபோதும் அது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இதன் தொடர்ச்சிபோல் மதிப்பிற்குரிய நித்தியானந்தனின் அண்மைய கவிதை நூல் வெளியீட்டு விழா பேச்சு அமைந்தது. அவர் தனது பேச்சில் "பெண்கள் தமது பாலியல் உறுப்புக்கள் குறித்து கொச்சையாக எழுதுவதாக சிலர் பேசித்திரிகின்றனர். இது குறித்து பெண்கள் அக்கறை கொள்ளத்தேவையில்லை. இது பற்றி பெண்கள் கவலை கொள்ளாமல் தொடர்ந்து எழுத வேண்டும்" என்று வலியுறுத்தினார். பெண்கள் முதலில் எழுத ஆரம்பிக்கும்போது சில தவறுகளை விட நேரிட்டாலும் தொடர்ந்து எழுதும்போது காலப்போக்கில் நல்ல எழுத்துக்களைக் கொடுப்பார்கள், கொடுக்கவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே அவர் இவ்வாறு கூறியிருப்பார் என நம்புகிறேன். எனினும் மார்க்சிய அறிவும் சமூக அக்கறையும் கொண்ட நித்தியானந்தன் போன்றோர்கள் இவ்வாறு பொதுவாகக் கூறி அவற்றில் இருந்து ஒதுங்கிக் கொள்ளாமல் பெண்கள் பிரச்சனை குறித்து தெளிவாக எடுத்துக்கூறி பெண்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக திகழவேண்டும்.

உலகில் உள்ள பெண்கள் அனைவருக்கும் பிரச்சனைகள் இருப்பினும் நாம் குறிப்பாக எமது நாட்டின் தமிழ் பெண்களின் பிரச்சனைகளில் இருந்து பெண் விடுதலை குறித்து சிந்திக்க ஆரம்பிப்போமாயின் பல்வேறுபட்ட கருத்துக்கள் எம் முன் குவிகின்றன. முக்கியமாக "மண் விடுதலை பெற்றால் பெண் விடுதலை தானாக வரும்" என்றும் "பெண் விடுதலை பெற்றால்தான் மண் விடுதலை பெறமுடியும்" என்றும் கருத்துக்கள் எதிரும் புதிருமாக வைக்கப்படுகின்றன. மக்கள் தொகையில் அரைவாசிக்கும் மேலான எண்ணிக்கையில் உள்ள பெண்கள் சமூகம் பற்றி அவர்களின் உண்மையான விடுதலை குறித்து இன்றும்கூட விரிவான அளவில் ஆய்வு செய்து தீர்க்கமான முடிவுகள் எதனையும் தமிழ் விடுதலை இயக்கங்கள் முன்வைக்காதது வெட்கத்திற்கும் வேதனைக்குமுரியதாகும். இது பெண் விடுதலை குறித்து அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையின்மையை நன்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக உள்ளது.

முதலாளித்துவ நாடுகளில், அரசியல்வாதிகள் எப்போதுமே தமது மனைவியரை தம் சரீரத்தின் ஒரு இணைப்புப் பகுதி போல் கருதி தாம் போகுமிடமெல்லாம் அவர்களையும் காட்சிக்கு வைக்க வேண்டும் என எண்ணுகின்றனர். அவரது உடல் கணவரது அரசியல் நலன்களைப் பேணவும் மறுபுறத்தில் மோட்டார்கார்களையும் துணி துவைக்கும் இயந்திரங்களையும் விற்கப் பயன்படுத்தப்படுகிறது.

அண்மைக்காலங்களில் பெண்கள் விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைகளின் விளைவாக சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அடிப்படையான நிலவரம் அப்படியே உள்ளது. எனினும் சோசலிசத்தின் கீழ் நிலைமை அவ்வாறு இருத்தலாகாது. அரசாங்கத்தின் தலைமை உறுப்பினர்கள் வெளிநாடு போகும் போது தம் மனைவியரைக் கூட்டிச் செல்லும் வழமை சோசலிச நாடுகளில் என்றும் இருந்ததில்லை. தோழர் லெனினோ அல்லது ஸ்டாலினோ அல்லது மாஓசே துங்கோ தமது மனைவியரை தம்முடன் அழைத்துச் சென்றதுமில்லை. காட்சிப் பொருளாக்கியதுமில்லை.

முதலாளிய சமுதாயத்தில் பெண்களின் தாழ்நிலை பொருளாதார அடிப்படையில் ஆணுக்கு கீழ்ப்பட்டிருப்பதின்று எழுகிறது. நாகரிகத்தின் தொடக்கத்தில் தாய்வழிச் சமூக வடிவிலே ஆணை விடவும் கூடுதலான அதிகாரம் பெண்ணிடம் இருந்து. பெண்ணே குழந்தையைப் பெற்றுக் கொடுக்கும் பிரதான பணியைச் செய்ததன் காரணமாக குடும்பத்தின் தலைமை பெண்ணிடமே இருந்தது. சமுதாயத்தின் அக்கால கட்டத்தில் திருமணமோ ஒரு தார மணமோ ஒரு சமூக ஏற்பாடாக இருக்கவில்லை. குழந்தைகள் தாய் வழியிலேயே அடையாளங் காணப்பட்டனர்.

இதன் பொருள் அவர்கள் பாலியல் கட்டுப்பாடு இன்றி வாழ்ந்தனர் என்பதல்ல. ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்ந்து குழந்தைகளைப் பெற்றனர். ஆனால் ஆதிக்கம் பெண்ணிடம் இருந்தது. கருத்து வேறுபாடு காரணமாக பிரிய நேரிடும் போது ஆணே சமூகக் குழும வீட்டை நீங்கிச் செல்ல வேண்டியிருந்தது. குழந்தைகள் தாயுடனேயே இருந்தனர். சமுதாயத்தின் இக்காலகட்டத்தில் உற்பத்திக் கருவிகள் எதுவுமே தனியார் உடமையாக இருக்கவில்லை. பெருமளவும் அவை எளிதாக ஆக்கக் கூடியனவான அம்பு, வில், ஈட்டி என்பனவாயும் முழுச் சமுதாயத்திற்கும் உரியனவாயும் இருந்தன. மந்தைகள், காணிகள் போன்ற தனியார் உடைமை தோன்றவில்லை. எனவே ஒரு தகப்பன் தனது குழந்தைக்கு விட்டுச் செல்ல எதுவுமே இருக்கவில்லை.

உற்பத்திச் சக்திகளின் விருத்தியின் விளைவாக உற்பத்திக் கருவிகளின் உடைமை தனியார் கைக்கு மாறிய போது இந்த நிலைமை மாறியது. ஆதன்பின் பணத்தின் திரட்சியும் மூலதனமும் உருவாகியது. இந்த நிலைமைகளுள் ஆண் தனது தனியுடமை தனது மனைவிக்குப் பிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது குழந்தைக்குப் போவதை விரும்பினான். இதுவே ஒருதார மணம் நடைமுறைக்கு வந்ததன் அடிப்படை. ஏங்கெல்ஸ் அவர்கள் சுட்டிக்காட்டிய படி ஒரு நபரின் கையில் கணிசமான செல்வம் குவிந்ததன் விளைவாகவும் அச்செல்வத்தை அம்மனிதன் வேறொருவருக் குமின்றி தன் குழந்தைகளுக்கு மட்டுமே விட்டுச் செல்ல விரும்பிய காரணத்தாலுமே ஒருதார மணம் உருவானது. இது பெண்ணுக்கு உரியதாக இருந்ததேயொழிய ஆணுக்கு அல்ல. இவ்வாறே பெண்வழிச் சமூகம் ஆண்வழிச் சமூகமாக மாறியது. ஆண் ஆதிக்க நிலைமைக்கு வந்தான்.

இவ் ஆண்வழிச் சமூகம் என்றேனும் முடிவுக்கு வருமா? பெண்கள் விடுதலை பெற முடியுமா? ஆம் ,பொருளாதார நிலைமைகள் மாறி உற்பத்திக் கருவிகள் மீண்டும் சமூகத்தின் உடமையாகும் போது நிச்சயமாக அது முடிவுக்கு வரும். உற்பத்தியில் சமபங்கு உடையவராக பெண்ணின் நிலை மீட்கப்படும். அத்தகைய ஒரு சமூகத்தில் பெண்கள் ஆண்களுடன் பூரண சமத்துவம் அனுபவிப்பர் என்பதில் ஐயமில்லை. எனவே உண்மையான பெண் விடுதலை என்பது இவ் முதலாளிய சமுதாயத்தை தூக்கியெறிந்து ஒரு கம்யுனிச சமுதாயத்தை படைக்கும் போதே பெறமுடியும் என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடியும். அவ் சமுதாய மாற்றத்தை ஒரு புரட்சியின் மூலமே ஏற்படுத்தலாம் என்பதையும் வேறு வழியேதும் கிடையாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே ஒரு கட்சியின் மூலமே அப்புரட்சியை மேற்கொள்ள முடியும் என்பதால் பெண் விடுதலையை உண்மையாகவே விரும்புவர்கள் ஒரு கம்யுனிஸ்ட் கட்சியைக் கட்டுவதையே தமது பிரதான பணியாக கொள்ளவேண்டும். ❑


மக்கள் சேவையே அப்பன் விநாயகன் சேவை

**வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தின் சமூகப்பணி மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட உள்ளது.**

# முதியோர் இல்லம்
# Home for the Aged

*அறுவது பேருக்கான படுக்கை வசதிகள்*
*ஆண் – பெண் தனித்தனி படுக்கைப் பிரிவுகள்*
*உணவு மற்றும் ஒன்றுகூடல் மண்டபம்*
*4 மேசைகள் – 60 கதிரைகள் – தளபாடங்கள்*
*கிணறு – இறைப்பு இயந்திரம் – நீர்த்தாங்கி*
*சமையலறை மற்றும் கழிப்பிட வசதிகள்*

2005 Tsunami Relief Fund Guarantee, Ltd அமைப்பே இத்திட்டத்தை பொறுப்பேற்று நடாத்த உள்ளது.

10 மாதங்களில் நிறைவேற்றப்படக் கூடிய இத்திட்டமதிப்பீடு : £ 27,390

**இத்திட்டத்தில் உங்கள் பங்களிப்பைச் செய்ய விரும்புபவர்கள் கற்பக விநாயகர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

**2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX**

**Tel : 020 8527 3819**

**சமூகப்பணிகளில் கற்பக விநாயகர் ஆலயம்**

* £40,000 தாயகத்திற்கு அனுப்பி உதவியது. ( கார்ள்டன் ரவல்ஸின் உதவியுடன் ) *
* திருக்கோயிலில் உள்ள குருகுலத்தில் 36 சிறார்களை ஆலயம் பராமரிக்கிறது. *
* தேர்த்திருவிழாவில் சேரும் நிதி வெண்புறாத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. *
* முத்தோர் நலன்புரி நிலையம் மற்றும் இலக்கிய முயற்சிகளுக்கு உதவி வருகிறது. *


தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் செல்வராஜா
நூலகவியலாளர்

# கடல்கட்டி

ஈழத்து இலக்கியங்களில் அதிகம் பேசப்படாத ஒரு கதைத்தளம் முத்துக்குளித்தல் தொடர்பானதாகும். மீனவர்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டும் செங்கை ஆழியானின் வாடைக்காற்று, அங்கையன் கைலாசநாதனின் கடல்காற்று, போன்ற நாவல்கள் பல வெளிவந்திருந்தாலும், முத்துக்குளிப்பு போன்ற தொழில் நுணக்கம் நிறைந்த கதைத் தளங்களுடன் தொடர்புபட்ட களங்களில், குறிப்பாக இலங்கையில் முஸ்லீம்களின் குடியேற்றச் சரித்திரத்தின் ஒரு முனைக்குத் திசைகாட்டியாய் அமைகின்ற ''கடல்கட்டி''யை ஒத்த படைப்புக்கள் வெளிவந்திருப்பது குறைவென்றே சொல்ல வேண்டும்.

'கடல்கட்டி' என்ற இந்நாவல் ஜனாப் கமால்தீனால் மீளக்கண்டெடுக்கப்பட்டு ஈழத்து தமிழ் இலக்கியத்துக்கு வழங்கப்பட்டது. கவனிப்பாரற்றுக் கிடந்த முத்துக் குளிக்கும் தொழில்பற்றியும் அது சார்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள் பண்பாடுகள் பற்றியுமான அவரது தேடுதலாக இந்த கடல்கட்டி நாவல் மலர்ந்திருக்கின்றது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாவலை கமால்தீன் எழுதியிருந்தார். அப்போது ''முத்துச் சிப்பி'' என்ற பெயரில் இந்நாவல் இலங்கையில் தினகரன் நாளிதழில் 1972இல் தொடராக வெளிவந்திருந்தது. தற்போது 30 வருடங்களுக் குப் பின்னர் இது நூலுருவில் வெளியிடப்பட்டு உள்ளது.

சுழியோடிச் சிப்பி சேர்ப்பது முதல் அவற்றுள் தேர்ந்த முத்துக்களை உலகெங்கும் சீராகச் சந்தைப்படுத்தும் வர்த்தகம் வரையிலான நடவடிக்கைகள் அனைத்திலும் பெருந்தொகையான முஸ்லிம்களே பங்குகொண்டிருந்தனர். இவ்வகையாக தென்னிந்தியா, அரேபியா, பாஹ்ரைன், பாரசீகம் போன்ற நாடுகளுடன் முத்து வணிகத்தில் ஏற்பட்ட தொடர்புகள் வரலாற்றுக் குறியீடுகளாக இன்றும் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உலகச் சந்தைகளில் கடல் முத்துக்குப் பிரசித்தம் பெற்றது ஈழத்திருநாடு. கி.மு.ஆறாம் நூற்றாண்டில் இலங்கை மன்னன் விஜயன் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனுக்கு அனுப்பி வைத்த பரிசில்களில் ஈழத்து முத்துக்களும் இடம்பெற்றிருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. கி.மு. 3ம் நூற்றாண்டில் சந்திரகுப்த மௌரியருடைய அரசவையில் கிரேக்கத் தூதுவராக இருந்த மெகாஸ்தனிஸ் முத்து வளத்தில் இந்தியாவைவிட இலங்கை தான் மேலோங்கி யிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இத்தனை சிறப்புமிக்க ஈழத்து முத்துக்களுக்கு மன்னார் குடாக்கடலே விளை நிலமாக காலம் காலமாக இருந்து வந்துள்ளது.

இக்கடல் தழுவிடும் கிராமங்களுள் ஒன்றாகிய சிலாவத்துறைதான் ''கடல்கட்டி'' நாவலின் நிகழ்களமாகும். மன்னார் நகரை அண்மித்துள்ள சிலாவத்துறையில் பல நூற்றாண்டுக் காலமாக நடந்து வந்துள்ள முத்துக்குளிப்புப் பின்னணியில் இந்த நாவல் நகர்கின்றது. மன்னார் குடாக்கடலினுள் அதிகாலையில் சென்று முக்குளித்து முத்துப்பண்ணைகளை, பவளப்பாறைகளை நாடிச் சுழியோடும் இளைஞர்களுக்கு கடலின் ஆழத்தில் காத்திருக்கும் ஆபத்து ஆட்கொல்லிச் சுறாக்களாகும். இந்தச் சுறாக்களின் பார்வையிலிருந்து தப்பி வெற்றிகரமாக முத்துக்குளித்து கடல்படுக்கையில் காத்திருக்கும் தங்கள் வள்ளங்களுக்கு மீண்டுவந்து கரைசேரும் வரை அவர்களுக்குத் தைரியத்தை வழங்குவது அவர்களின் தெய்வநம்பிக்கையும், அதனோடு தொடர்புபட்ட மாந்திரீக நம்பிக்கையுமாகும்.

சுழியோடிகளுக்கு சுறாக்களிலிருந்து ஆபத்து நேரா வண்ணம் அவர்கள் முத்துக்குளிக்கும் முத்துப்பண்ணைப் பகுதிகளில் சுறாக்களை வரவிடாது கட்டிப்போடும் மாந்திரீகர்கள், இந்தக்கடல் தழுவிடும் கிராமத்துச் சமூகங்களில் முக்கிய பிரமுகர்களாகக் கருதப்படுகிறார்கள்.

அவர்களின் மந்திரசக்தியின் மீது கிராமத்தவர் வைத்திருக்கும் அசையாத நம்பிக்கையே இந்த அப்பாவி மீனவர்களுக்குத் தைரியத்தையும், அவர்களை நம்பிக் கரையில் காத்திருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு நம்பிக்கையையும் தருகின்றது. இத்தகைய மாந்திரீகர்களே ''கடல்கட்டி'' எனப்படுகின்றார்கள். இத்தகைய ஒரு கடல்கட்டியான ஹபீபுக் கிழவன் தான் இந்தக் கதையின் முக்கிய பாத்திரமாக இருக்கின்றார்.

''கடல்கட்டி'' ஹபீபுவின் பேத்தி மரியம் பீபிக்கும் முத்துக்குளிக்கும் இளைஞன் இப்ராஹிம் ஒமரானுக்கும் இடையே மலரும் கிராமியக் காதலும், அதற்கு ஏற்படுத்தப்படும் தடையும் அதை வெற்றிகொள்ளும் பாங்கும் இங்கு சுவையான கதையாக மலர்கின்றது. ஹபீபுக் கிழவனுடைய நண்பனும் முத்து வியாபாரியுமான காசிம் முஹம்மது ஹபீபுக் கிழவனுக்கு பணத்தாசை காட்டி மரியம் பீபியை இரண்டாம் தாரமாக மணக்க விரும்பும் போது கதை விறுவிறுப்பாகச் செல்லத் தொடங்குகின்றது. காதலுக்கு ஏற்படுத்தப்படும் முட்டுக்கட்டைகள், அதை எதிர்கொள்ளும் செயற்பாடுகள் அனைத்தும் சிலாவத்துறைக் கிராமத்தின் முத்துக்குளிப்போர் சமூகமொன்றின் அன்றாட வாழ்வியல் அனுபவங்களினூடாக அழகாகவும் எளிமையாக நகர்த்திச் செல்லப்படுகின்றது. ❒



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "துப்பாக்கிகள் கற்கால மக்களுக்கு மட்டுமே"

வங்காரி மத்தாய் (2004ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்.)

# AIDS Made in America


Dr புகழேந்தி

மருத்துவத் துறையில் தங்கப் பதக்கம் பெற்றவர். இந்தியாவில் கல்பாக்கம் அனு மின் நிலையங்களை ஒட்டியுள்ள பகுதியில் கதிர்வீச்சு அபாயம், குழந்தைகளுக்கு ஆறு விரல்கள் இருப்பது, புற்றுநோய் குறித்து பல ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர்.


அவரது AIDS: A Biological Warfare? நூலைத் தழுவி இக்கட்டுரையை ச வேலு தொகுத்துள்ளார்

இன்று வரை நம்மிடையே "பாதுகாப்பான உறவு" எனப் பரப்பப்பட்ட செய்திகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் விசுவாசமான பிரச்சாரங்களும் ஒழுக்கம் பற்றிய விளிம்புக்குள்ளேயே சுற்றிவந்தன. மூன்றாம் உலக நாடுகளின் சுற்றுலா தளங்களில் இறக்கிவிடப்பட்ட, இந்த எய்ட்ஸ் பற்றிய மறுபக்க ஆய்வுகள், இன்றுவரை புரிய வைக்கப்பட்ட செய்திகளைத் தலைகீழாக மாற்றியுள்ளது.

எய்ட்ஸ் பீதியை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்ட ஊசி தயாரிக்கும் குழுமங்களும், இரத்தம் செலுத்தும் மையங்களும், ஆணுறை தயாரிக்கும் நிறுவனங்களும் கொள்ளையடிக்கத் தொடங்கிவிட்டன.

## எய்ட்ஸ் என்பது இயற்கை வியாதியா?

எய்ட்ஸால் இறந்த பலரையும் பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவ ஆய்வாளர்களின் அறிக்கை நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகின்றது. எயிட்ஸ் என்பது இயற்கையான வியாதியுமல்ல, ஓரினச் சேர்க்கையாளர்களை (Homo Sexuals) ஒழிக்க மட்டும் வந்த வியாதியுமல்ல. கருப்பின மக்களை மட்டும் அழிக்கவந்த வியாதியுமல்ல. எய்ட்ஸ் என்பது மனிதர்களால் சோதனைச் சாலையில், மனிதர்களுக்கு எதிராக கிருமியை உருவாக்க முடியும் என்பதற்கான ஆதாரத்திலிருந்து(1) எய்ட்ஸ் மனிதனால் உருவாக்கப்பட்டது என்பது இன்று உறுதியாகின்றது.(2)

இத்தகைய ஆட்கொல்லிக் கிருமி உருவாக்கங்களின் தேவை என்ன? இது எத்தகைய அழிவுகளை உருவாக்க வல்லது என்பதனையும், இதன் பின்புலம் என்ன என்பதனையும் அறிந்தோமானால், அதிர்ச்சியளிக்கக்கூடிய பல உண்மைகள் புரியவரும்.

1 டிசம்பர் 2005

## எய்ட்ஸின் பின்னணி

அமெரிக்கா தனது மேலாண்மையை நிறுவவும், மூன்றாம் உலக மக்கள் தொகையை கட்டுப்படுத்தவும் எய்ட்ஸ் போன்ற கிருமியை உருவாக்கத் திட்டமிட்டது. இதற்கான நிதியை அமெரிக்க காங்கிரஸ் இடமிருந்து (60 மில்லியன் டாலர்கள்) பெற்று அமெரிக்க இராணுவத் தலைமைக்கு (பென்டகன்) வழங்கியுள்ளது. இதற்கு பின்புலமாக செயற்பட்டவர் ஹென்றி கிஸ்சிங்கர் (அமெரிக்காவின் முன்னாள் Secretary of State) என்பதும், இந்த இரகசிய உயிரியல் கிருமியை உருவாக்கும் திட்டத்திற்கு MK-NAOMI (Negroes Are Only Momentary Individuals) எனப் பெயரிடப்பட்டது என்பதும், சீ.ஐ.ஏ.யின் துணையுடன் இத்திட்டத்தின் முழுக் கட்டுப்பாடும் கிஸ்சிங்கர் மற்றும் அவருடன் இருந்த மிகச் சில MK NAOMI விஞ்ஞானிகள் கைகளிலேயே இருந்துள்ளது என்பதும் தெரியவந்துள்ளது.(3)

இந்த இராணுவ உயிரியல் கொல்லி ஆராய்ச்சித் திட்டத்தின் விளைவாக மனிதனில் நோய் எதிர்க்கும் திறனை சீர்குலைக்க உருவாக்கப்பட்ட ஆற்றல் மிக்க கிருமியால் ஏற்படும் (இறப்பும்) முடிவுகளையும், அதற்கான விரிவுபடுத்தப்பட்ட திட்டங்களையும் அம்பலப்படுத்தும் முயற்சியில் இறங்கியவர்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர். வழக்கம்போல இச்செய்திகள் வெளிவராமல் திட்டமிட்டு மறைக்கப்பட்டுமுள்ளன.

## செயல்திட்ட வடிவங்கள்

1964 இல் உலக நாடுகளிலிருந்து பலதரப்பட்ட புற்று நோயால் பாதிக்கப்பட்ட உறுப்புகளை சேகரிப்பதும், புற்றுநோய் உருவாக்கக்கூடிய வைரஸ் கிருமிகளை பெருமளவில் சோதனைச் சாலைகளில் வளர்ப்பதற்குமான சிறப்பு வைரஸ் புற்றுநோய்த் திட்டமும் (SVCP - Special Virus Cancer Program 1962-77) தேசிய புற்றுநோய் நிறுவனமும் (NCI - National Cancer Institute) அரசின் நிதி உதவியோடு ஒன்றாக இணைக்கப்பட்டு அனைத்து புற்று நோய்களையும் உள்ளடக்கக்கூடிய ஆய்வுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டது.

தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாய்வுத் திட்டத்தின் கீழ், சிம்பன்சி குரங்கின் உறுப்புகளை மனித உடம்பில் பொருத்தி, சோதனை செய்துள்ளனர். 1964இல் சிம்பன்சி குரங்கின் சிறுநீரகங்களை ஆறு மனிதர்களுக்குப் பொருத்தியதில் ஆறு பேரும் இறந்துள்ளனர். பின்னர் மனிதர்களுக்கிடையே உறுப்பு மாற்றம் செய்ததில் விஞ்ஞானிகள் வெற்றிகண்டுள்ளனர்.

SVCP திட்டத்தின் மூலமே விலங்குகளைப் பாதிக்கும் பல வைரஸ் கிருமிகளை மனிதர்களிடையே பரப்பும் சோதனைகள் நடந்தேறியுள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக புற்றுநோயை உண்டாக்கவும், மனித நோய் எதிர்ப்புத் திறனை சீர்குலைக்கக்கூடிய பல விலங்கு வைரஸ் கிருமிகள் மனித செல்(Cell)களுக்கும், திசுக்களுக்கும் மாற்றம் செய்யும் அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. இக்குழுவில் Robert Galloவும் (எய்ட்ஸ் கிருமியின் கண்டுபிடிப்பாளர்களில் ஒருவர்) இடம்பெற்றிருந்தது முக்கிய அம்சமாகும். இத்திட்டத்தில் ஜப்பான், ஸ்வீடன், இத்தாலி, நெதர்லாந்து, இஸ்ரேல், உகண்டா, ஆபிரிக்கா நாடுகளைச் சேர்ந்த வல்லுநர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

பின்னர் இத்திட்டத்தில் அமெரிக்க இராணுவ உயிரியல் போர்முறை (Biological Warfare) ஆய்வாளர்களும் இணைக்கப்பட்டனர். அக்டோபர் 18, 1971இல் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சனின் உத்தரவின்பேரில் இராணுவ உயிரியல் போர்முறைச் சோதனைச் சாலைகளை SVCP இன் கீழ் கொண்டுவரும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆய்வகம் வெளியிட்ட ஆண்டறிக்கையில் ஆய்வகத் தேவைகளுக்கான புற்றுநோயை உருவாக்கும் வைரஸ் கிருமிகளை தொடர்ந்து கிடைக்கும் வகையில் செய்தலே அதன் முக்கிய பணி என்றும் மனிதர்களுக்கு நெருக்கமான விலங்குகளைப் பாதிக்கும் வைரஸ் கிருமிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது, (எய்ட்ஸை உண்டாக்கும் HIV அத்தகைய இனத்தைச் சேர்ந்தது) மனிதர்களை பாதிக்கும் வைரஸ் கிருமிகளை பெருமளவு வளர்த்தெடுப்பது போன்றவை பிற பணிகளாகவும் இருக்கும் என அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்த ஆய்வகங்களில் தான் சுண்டெலி, பூனை போன்றவற்றைப் பாதிக்கும் புற்றுநோய் வைரஸ் கிருமிகளை குரங்குகளுக்குச் செலுத்தி அதன்மூலம் குரங்குகளுக்கு புற்றுநோயை ஏற்படுத்தும் சோதனையில் வெற்றி அடைந்தனர். இத்தகைய சோதனைகளில், இனம் விட்டு இனம் தாவும் (Species jumping) கிருமிகள் உருவாக்கப் படுவது பொதுவான விசயமாக இருந்து வந்தது.

1970இல் எய்ட்ஸ் ஏற்படுத்தும் HIV கூடவே ஒரு புதுவகை Herpes வைரஸ் ஓரினச் சேர்க்கையாளர்களிடத்து மட்டும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த Herpes வைரஸ் தற்போது எய்ட்ஸ் நோயாளிகளுக்கு ஏற்படும் Kaposis Sacroma (Gay Cancer of AIDS) என்ற நோய்க்குக் காரணம் என நம்பப்படுகின்றது. உலகில் எய்ட்ஸ் தாக்கம் வருமுன் ஆரோக்கியமான இளைஞர்களுக்கு Kaposis Sacroma பாதிப்பு இருந்ததாக எந்த ஆதாரமும் இல்லை. எய்ட்ஸ் கண்டுபிடிக்கப்பட்ட பத்து ஆண்டுகள் கழித்து தெரியவந்த (1994இல்) Kaposis Sacroma வைரஸ்களுக்கும் மனிதர்களை ஒத்த தன்மையுள்ள விலங்கினங்களுக்கு (குரங்குகளுக்கு) வியாதியை ஏற்படுத்தும் Herpes வைரஸ்க்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதும், அத்தகைய வைரஸினைத் தான் பத்தாண்டுகளுக்கு முன்னர் விலங்குகளிடமிருந்து மனித உடலில் வெற்றிகரமாக செலுத்தும் ஆய்வுகள் மும்முரமாக நடைபெற்றன என்பதும் தெளிவாக உள்ளது.

மேலும், கலப்படம் செய்யப்பட்ட தடுப்பூசிகளால் எய்ட்ஸ் வரும் என்பதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளதுடன், HIV வைரஸ் புற்றுநோயை உண்டாக்கவல்ல கிருமியே எனவும், எய்ட்ஸ் என்பது கொள்ளை நோயாகவரும் ஒருவித புற்றுநோயே என்பதை 1984இல் Robert Gallo (எயிட்ஸ் கண்டுபிடிப்பாளர்களில் ஒருவர்) தெளிவுபடுத்தி உள்ளார்.

போலியோ தடுப்பூசியை கண்டுபிடித்த ஜோனஸ் சால்க்ஸ் செய்த பல ஆய்வுகளில் அவருக்குத் தெரியாமலேயே Hela செல்கள் கலந்திருந்தது அவருக்குப் பின்னர் தெரியவந்துள்ளது. அதே போல் புற்றுநோய் தடுப்பூசி ஆய்வுகளில் Hela செல்கள் அதிகம் கலந்திருப்பது பிறகு தெரியவந்துள்ளது. (4)

1951இல் முதன் முதலில் சோதனைச்சாலைகளில் மனித செல்களை வளர்த்தெடுத்தனர். இதற்கு பால்டிமோர்

GAO

Accountability · Integrity · Reliability

**United States General Accounting Office**
**Washington, DC 20548**

June 17, 2002

The Honorable James A. Traficant, Jr.
House of Representatives

Subject: *Origin of the AIDS Virus*

Dear Mr. Traficant:

In response to your request to review an individual's allegations that the National Cancer Institute's Special Virus Cancer Program (SVCP) created the AIDS virus, we obtained information on (1) the overall stated purposes and outcomes of SVCP, (2) scientific assessments of the origins of the AIDS virus (HIV-1) and any possible evidence regarding the origins of the AIDS virus at SVCP, and (3) the outcome of recent litigation regarding the origins of the AIDS virus. On June 13, 2002, we briefed your staff on the results of our analysis. The enclosed slides formed the basis of the briefing we presented.

நகரைச் சேர்ந்த Hennrieta Lacks என்னும் இளம் கறுப்பின பெண்ணின் கர்ப்பப்பையின் கீழ்ப்பகுதியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட திசுவே Hela செல் என அழைக்கப்படுகின்றது.

இதே போல் இரண்டாம் உலகப் போரின் போது மனித இரத்தத்திலிருந்து தயாரிக்கப்பட்ட Yellow Fever Vaccine இல் மஞ்சள் காமாலை வைரஸ் (Hepatitis Virus) கலந்திருப்பது பின்னர் தெரியவந்துள்ளது.(5)


1970 - 80களில் Flu காய்ச்சலுக்கு எதிரான தடுப் பூசிகளில் மரபணு மாற்ற தொழில்நுட்பத்தில் தயாரான Mycoplasma, வைரஸ் கிருமிகள் கலக்கப்பட்டிருந்ததுடன் இதை டெக்சாஸ் மாநில ஹன்ட்ஸ்விலி சிறைக் கைதிகளுக்குக் கொடுக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. இதை இராணுவமும், மருத்துவ மையங்களும் இணைந்து நடத்தியது. இந்த மனித விரோத பரிசோதனைக் குழுவில் DNA வடிவத்தைக் கண்டு பிடித்ததற்காக நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியான ஜேம்ஸ் வாட்சனும் ஒருவர் என்பது வெட்கக்கெடான செய்தி. (இவர் தற்போது Human Genome Project இன் முக்கிய அலுவலர்)

ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு இரகசியமாக செலுத்தப் பட்ட Mycoplasma Penetrans எனும் கிருமியைப் பற்றிய தகவல்களும் மறைத்தே வைக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவில் டேவிட் என்னுமிடத்தில் ஒரு வகை குரங்குகளிடம் ஏற்பட்ட எயிட்ஸ் கொள்ளை நோய் (Simian AIDS) காரணமாக பெரும்பாலான குரங்குகள் இறந்துள்ளன. இதுவே முதலில் பதிவுசெய்யப்பட்டது. இதுபோன்று நான்கு இடங்களில் இது நிகழ்ந்துள்ளது. இந்த வகை குரங்குகள் இறந்துபோக HIVயே காரணம் எனப் பின்னர் தெரியவந்தது. இச்சம்பவத்தை மறைக்க பல குரங்குகள் அட்லாண்டாவி லுள்ள எர்கிஸ் பகுதிக்கு கடத்திவரப்பட்டன. இவ்வாறு கடத்தப்பட்ட குரங்குகள் அனைத்தும் 1980 வாக்கில் Simian AIDS நோயால் தாக்கப்பட்டு இறந்துள்ளன.

1974ல் கால்நடை மருத்துவர்களால் சிம்பன்சி குரங்குக் குட்டிகளிடம் எயிட்ஸ் போன்ற நோய் உருவாக்கப் பட்டது. இளம் சிம்பன்சி குரங்குக் குட்டிகளை தாயிடமிருந்து பிரித்து, Bovine C Type Virus என்னும் வைரஸ் கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளான மாடுகளிடமிருந்து கிடைக்கும் வைரஸ் கலந்த பாலை மட்டும் கொடுத்தால் அக்குரங்குக் குட்டிகள் ஒரு வருடத்துக்குள் நியுமோனியா காய்ச்சல் (The Gay Pneumonia of AIDS) கண்டு இறந்துள்ளன.

1979இல் பெண்டகன் மையத்தின் உயிரியல் விஞ்ஞானி Dr. Mac Arthur இன் உத்தரவுக்கிணங்க சோதனைச் சாலைகளில் உருவாக்கப்பட்ட HIV அமெரிக்காவில் முற்றி லும் வெறுக்கப்பட்ட ஓரினச் சேர்க்கையாளர்களிடத்து அவர்களுக்குத் தெரிந்தும், தெரியாமலும் பரிசோதனை செய்யப்பட்டது. அதன் விளைவாகவே AIDS கிருமி அவர்களுக்கு மஞ்சள் காமாலை தடுப்பூசித் திட்டத்தின் மூலம் பரப்பப்பட்டது. அதன் காரணமாக அமெரிக்காவில்




மேலுள்ள படம் DNA இன் இரட்டைச் சுருள் வடிவத்தைக் காட்டுகிறது.

அதன் கீழுள்ளவை இரட்டைச் சுருள் பிரிந் மற்றுமொரு DNA யுடன் இணைந்து புதிய வகையான DNA யை உருவாக்குகிறது. தெரிவு செய்யப்பட்ட DNA உடன் மட்டும் சேரும் வைரஸ் DNA யை இணைப்பதன் மூலம் குறிக்கப்பட்ட இனங்களை மட்டும் தாக்கும் (Designer Virus) நோய்க்கிருமிகள் உருவாக்கப்படுகிறன்றன.

AIDS ஆல் பாதிக்கப்பட்டவர்கள் நியுயோர்க் மன்ஹட்டன் நகரைச் சேர்ந்த ஓரினச்சேர்க்கையாளர்களே. மஞ்சள் காமாலை தடுப்பூசித் திட்டத்திற்கு ஒத்துக்கொண்ட 20 சதவீதமான ஓரினச் சேர்க்கையாளர்கள் இரத்தத்தில் 1980 - 81 வாக்கில் செய்யப்பட்ட ஆய்வில் HIV Positive இருப்பது தெரியவந்தது. இது 1983இல் 30 சதவீதமாக உயர்ந்து உள்ளது. 1981இல் தான் HIV எயிட்ஸுக்கு காரணம் என வெளியிடப்பட்டது.

நியுயார்க் நகர மன்ஹட்டன் (Manhatton) தான் எய்ட்சின் பிறப்பிடம். ஆபிரிக்காவில் 1982ஆம் ஆண்டின் பின்னரே உறுதிசெய்யப்பட்ட AIDS நோயாளிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. எய்ட்ஸ் வல்லுநர்கள் சிம்பன்சி குரங்குக ளிடம் இருந்துதான் மனிதனுக்கு எயிட்ஸ் கிருமி தொற்றி உள்ளது எனும் கருத்தை மட்டும் ஏற்றுக்கொள்கின்றனர்.

1970களில் தயாரிக்கப்பட்ட மஞ்சள் காமாலை தடுப்பூசி சிம்பன்சி குரங்குகளின் இரத்தத்திலிருந்து தயாரிக்கப்பட்டது என்பதும், குரங்குகளிடமிருந்து எய்ட்ஸ் தோன்றி வளர்ந்திருக்கிறது என்பதும் தற்செயல் நிகழ்வு அல்ல.

ஆபிரிக்காவில், உலக சுகாதார நிறுவனத்தின் திட்டமான பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தின் மூலம், பல மில்லியன் மக்களுக்கு, எய்ட்ஸ் கிருமி கலந்த பெரியம்மை தடுப்பூசி கொடுத்ததன் காரணமாக எயிட்ஸ் பரவியது என்பதை மே 11 1987 டைம்ஸ் பத்திரிகை தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது(6).

தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதனை விலங்குகளாக சொந்த நாட்டு மக்கள்

1965இல் உருவாக்கப்பட்ட LEMSIP (The Laboratory for Experimental Medicine and Surgery) என்ற ஆய்வுக்கூடம் 1997 வரை, விலங்குகளிடமிருந்து மனித செல்களில் பரவக்கூடிய வைரஸ் கிருமிகளை ஆய்வுசெய்யும் நியுயார்க் பல்கலைக் கழக விஞ்ஞானிகளுக்கு விலங்கின் உறுப்புக ளை தொடர்ந்து கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளது.

நியுயார்க் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வாளர்கள் தான் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட மஞ்சள் காமாலை தடுப்பூசித் திட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

1994இல் மக்களின் ஒப்புதல் இல்லாமலேயே பல கதிர்வீச்சு தொடர்பான சோதனைகளை அமெரிக்க மக்கள் மீது அரசு நடத்தியுள்ளதற்கு எதிராக பல்வேறு ஜனநாயக அமைப்புகள் நடத்திய போராட்டத்திற்கு இணங்கிய அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன், இவற்றை விசாரிக்க அறிவுரைக் குழுவினை ஏற்படுத்தினார். தனது அறிக்கையில் (3 ஒக்டோபர் 1995) 1960 வரை மருத்துவர்கள் நோயாளிகளின் ஒப்புதல் பெறாமலே அவர்கள்மீது சேதனை செய்துள்ளதை அக்குழு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் 20 வருடங்களுக்கு மேலாக The U.S.Code annotated title 50, Chapter 32, Section 1520, dated July 30, 1977 என்கின்ற இச்சட்டத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பு அமைச்சகம் தனது சொந்த மக்களையே சோதனை விலங்குகளாக நடத்த ஒப்புதல் அளித்து வந்துள்ளது.

எய்ட்ஸ் யாரையும் தாக்கலாம் என இருந்தாலும், ஆபிரிக்காவில் ஆண் - பெண் புணர்ச்சிக்குப் பின்பே எய்ட்ஸ் ஏற்பட்டது என்பதும், அமெரிக்காவில் அது ஓரினச் சேர்க்கையாளர்களிடம் (ஆண்களிடம்) அதிகமாகக் காணப்பட்டது என்பதும் தெளிவான விசயங்கள்.

HIV கிருமி இனம், மொழி, பாலினத்தை மதிக்காது எனக் கொண்டால் ஏன் அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு மட்டும் எய்ட்ஸ் அதிகம் வரவேண்டும்?

எய்ட்ஸ் வல்லுநர்கள் அமெரிக்காவில் எய்ட்ஸின் பாதிப்பு ஆபிரிக்காவில் இருந்து வந்ததாகக் கூறுகின்றனர். ஆனால்அமெரிக்காவில் ஓரினச்சேர்க்கையாளர்களைப் பாதிக்குதம் எய்ட்ஸ் கிருமி வகை ஆபிரிக்காவில் இல்லவே இல்லை. பின் இது எப்படிச் சாத்தியம்?

1990களில் அணுவியல் உயிரியல் வல்லுநர்கள் எய்ட்ஸ் கிருமியில் எட்டு வகைகள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். இவற்றில் B வகை தான் பெருங்குடலைக் (Rectum) தாக்கும் திறனைக் கொண்டது. இந்தவகை எய்ட்ஸ் கிருமி அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கையாளர்களைத் தாக்குகின்றது. மாறாக ஆபிரிக்க எயிட்ஸ் கிருமி பிறப்புறுப்பு செல்களை (Vaginal Cervical Cells) தாக்கும் திறன் இருப்பது தெரியவந்தது. B வகைக் கிருமிகளால் அச்செல்களில் பாதிப்பை ஏற்படுத்த முடியவில்லை.

1997 ஆய்வுகளில் பத்தில் ஒரு அமெரிக்கருக்கு (வெள்ளை இன) எய்ட்ஸ் எதிர்க்கும் மரபணுக்கள் இருப்பதா கவும், ஆபிரிக்காவில் உள்ள கறுப்பின மக்களில் ஒருவர் கூட எய்ட்ஸ் பாதுகாப்பு மரபணுக்கள் பெற்றிருக்கவில்லை என்பதையும் தெளிவாகக் கூறுகையில் எயிட்ஸ் கிருமி என்பது சில இனக் குழுக்களையும் (கறுப்பர்களையும்) ஓரினச்சேர்க்கையாளர்களையும் திட்டமிட்டு ஒழிக்க உருவாக்கப்பட்ட Designer Virus என்பது தெளிவாகின்றது.

எய்ட்ஸ் கிருமி கண்டுபிடிப்பாளர்களில் ஒருவரான Robert Gallo 1987இல் Play Boy சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் "எனக்குத் தெரிந்து அமெரிக்காவில் ஆண் - பெண் புணர்ச்சிக்குப் பின் ஏற்பட்ட எய்ட்ஸ் பாதிப்பு இல்லவே இல்லை என்று கூறலாம்" என்றும், "அமெரிக்க பொது மக்களுக்கு எய்ட்ஸ் வியாதி என்றும் பெரும் பிரச்சினையாக இராது" என்றும் கூறியதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

"அமெரிக்க அதிகார மையங்களை விரிவுபடுத்த ஆற்றல் கொண்ட கிருமியை (Super Germ) உருவாக்குவதன் தேவை அரசுக்கு உள்ளது" A.H.Passerella - Director, Department of Defence, USA.

ஆக எயிட்ஸ் கிருமி அமெரிக்க ஆய்வகங்களில் உருவாகி பல ஆயிரம் மக்களை அழிக்கும் எண்ணத்துடன் (Weapon of mass destruction WMD) உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் இவ்வளவு ஆதாரங்களுடன் தெளிவான பின்பும், அமெரிக்கா மற்றவர்களிடம் உயிரியல் ஆயுதம் இருப்பதாகக் கூறி அவர்களைத் தாக்கும் இவர்களின் யோக்கியதையை நாம் என்னவென்பது? ❐

## Reference:


1. Dr. Alan Cantwell Jr. ***Queer Blood: The secret AIDS Genocide plot.***

2. John Seale, M.D. "***Origins of AIDS viruses HIV-1 & HIV-2: Fact or Fiction?***" The British Journal of the Royal Society of Medicine – 1988 (81:617-619)

3. Dr Leonard G. Horowitz. "***Emerging virusus: AIDS. Ebola***", Accident or International (1996)

4. M.Gold, ***A conspiracy of cells: one woman's immortal legacy and the medical scandal it caused.***

5. William Blum, ***Rough State.***

6. "***Small pox Vaccine Triggered AIDS Virus***" The London Times Front page story 11.05.1987




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விடுதலைப் போராட்டம் - அங்குமிங்கும்

பல்லாயிரக் கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டு கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்கிறது. ஆனால் அவ்வரலாறு தத்தமது நலன்களின் அடிப்படையில் சிலரால் பதிவு செய்யப்பட்டு உள்ளதே அன்றி, தமிழ் இனத்தின் வரலாற்றுத் தேவையின் அடிப்படையில் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு விஞ்ஞானபூர்வமாக பதிவு செய்யப்படவில்லை. ஆனால் நேர்மையாக பதிவு செய்யப்படாத அந்த வரலாற்றின் முதற் தலைமுறை மனிதர்கள் மறைந்து கொண்டு உள்ளனர். முழுமையான அந்த அஸ்தமனத்துக்கு முன்னர் குறைந்த பட்ச பதிவுகளையாவது சரியான முறையில் மேற்கொள்வது அவசியமானது.

இப்பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், அல்லது குறிப்பிட்ட சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் அது பற்றி தமது பதிவுகளை மேற்கொள்ளலாம். இதில் பெயர், விபரம் குறிப்பிடாதவர்களின் ஆக்கங்கள் எக்காரணம் கொண்டும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. இயலுமானவரை ஆதாரங்களை (பத்திரிகைச் செய்திகள், நூல்கள், கட்டுரைகள், துண்டுப் பிரசுரங்கள்) மேற்கோள் காட்டுவது தகவலின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த உதவும். கட்டுரையாளரே சம்பவத்துடன் தொடர்புபட்டவராக இருந்தால் அவர் தன்னை வெளிப்படுத்துவது விரும்பத்தக்கது. வெளிப்படுத்த விரும்பாதவர்கள் தகவல்களை அனுப்பி வைக்கும் பட்சத்தில் எதிர்கால பயன்பாட்டிற்காக சேகரித்து வைக்கப்படும்.

# சிவராம் : இரத்தக் கறை படிந்த கரங்கள்

நட்சத்திரன் செவ்விந்தியன்
அவுஸ்திரேலியா

தர்மரத்தினம் சிவராம் 1984 ல் PLOTE - People Liberation Organization for Tamil Eelam இல் போய்ச் சேர்ந்தபோது புளட்டின் உட்கட்சிப் படுகொலைகளும் சித்திரவதைகளும் உச்ச நிலையிலிருந்தன. PLOTE இல் இருந்த நேர்மையான போராளிகளில் PLOTE இனாலேயே சித்திரவதை செய்து கொல்லப்பட்டவர்கள் தவிர்ந்த மற்ற நேர்மையான போராளிகளான தீப்பொறி குழுவினர் முதலியோர் இக்காலப்பகுதியில் புளட்டிலிருந்து தப்பி வெளியேறிக் கொண்டிருந்தனர். தீப்பொறி குழுவின் மூலவர்களில் ஒருவரான நொபேட், புளட்டின் கொடூரச் சீரழிவுகளை வைத்து எழுதிய 'புதியதோர் உலகம்' என்ற நாவல் 1985 இல் தான் வெளிவந்திருந்தது.

சிவராம் முதலில் விடுதலைப் புலிகளில் தான் சேர விண்ணப்பித்தார். எனினும் மாத்தையாவினாலும் கிட்டுவினாலும் தனித்தனியே விடுதலைப் புலிகளில் சேருவதற்கு நம்பகமற்றவர் என்று திருப்பி அனுப்பப்பட்டார். அந்நேரம் விடுதலைப் புலிகள் எழுந்தமானமாக ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதில்லை. கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

இதன் பின்னரே சிவராம் புளட்டில் அசோக் எனப்படுகிற யோகன் கண்ணமுத்துவின் அணைவோடு இணைக்கப்பட்டார். இக்காலத்தில் உமா மகேஸ்வரன் எல்லோரையும் அடிப்படையின்றி சந்தேகிக்கின்ற paranoid மனோ வியாதிக்கு உட்பட்டிருந்தார். தன்னுடைய ஆங்கிலப் புலமையையும் உமாவின் பலவீனங்களையும் சாதுரியமாகப் பயன்படுத்தி, சிவராம் தலைமைக்கு மிகநெருக்கமாக குறுகிய காலத்திலேயே வந்துவிட்டார். இதன்போது புளட்டின் ஜனநாயக விரோதப் போக்குகளுக்கும் உட்கட்சி சித்திரவதைகளுக்கும் படுகொலைகளுக்கும் விசுவாசமாக உடந்தையானார்.

(1) 1984, 1985 காலப் பகுதியில் ஒரு தடவை யாழ்ப்பாணம் குருநகரில் சிவராமும் தீபனேசனும் வீதியில் தற்செயலாக தீப்பொறி குழுவினரைச் சேர்ந்தவர்களை எதிர்கொள்ள நேர்ந்தது. உடனடியாகவே சிவராம் தனது பையிலிருந்து SMGயை எடுத்து load பண்ணி அவர்களை நோக்கி சுடத்தயாரானார். அதிஸ்ரவசமாக பொதுமக்கள் அவ்விடத்தில் கூடிவிட்டதால் கொலை எதுவும் நடக்காமல் இரு தரப்பினரையும் பிரித்து அனுப்பி வைத்தனர்.

(2) பேராதனைப் பல்கலைக்கழக பல் மருத்துவத்துறை மாணவனான செல்வம் என்பவர் தனது பட்டப்படிப்பையே தியாகம் செய்து போராட வந்திருந்தார். இந்த செல்வமும் அகிலன் என்கிற இன்னொருவரும் சந்ததியாரோடு சேர்ந்து PLOTE இன் உட்கட்சிப் படுகொலைகள், ஜனநாயகம் இன்மை என்பவற்றிற்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். மட்டக்களப்பிலிருந்து கைதேர்ந்த கொலையாளியான வெங்கட்டையும் அழைத்துக்கொண்டு சிவராம் தலைமையில் ஒரு குழு மூதூருக்கு அகிலன், செல்வத்தைத் தேடிப் போனது. மூதூரில் ஒரு வீட்டிற்குள் சென்ற சிவராமும் வெங்கட்டும் அங்கிருந்த அகிலன் மற்றும் செல்வனையும் PLOTE இன் மகளிர் பிரிவுத் தளபதியான கரோலினையும் கண்டனர். சிவராமும் வெங்கட்டும் கரோலினை தவிர்த்து அகிலன், செல்வனைக்கடத்திச் சென்று மூதூரில் ஒரு வயல் வெளியில் கொன்று அவ்வயல் வெளியிலேயே இருவரையும் புதைத்துத் திரும்பினர்.

*தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய இரண்டு தகவல்களையும் மனித உரிமை களுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் UTHR(J) உறுதிப்படுத்தியுள்ளது. PLOTE உறுப்பினர்க ளுக்கு சிவராமின் அகிலன், செல்வன் கொலைகள் நீண்டகாலமாகத் தெரிந்த திறந்த இரகசியமே. இதனைவிட தலைமைக்கு எதிராக அகிலன், செல்வம் கிளர்ச்சி செய்தமையைப் பயன்படுத்தி தனிப்பட்ட பெண் விவகாரம் முதலியன சம்பந்தப்பட்ட கோப தாபங்களுக்காக இவ்விருவரும் சிவராமினால் கொலை செய்யப்பட்டிருக்க லாம் என்றும் அப்போது சந்தேகிக்கப்பட்டது.

சிவராம் பற்றி அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுகளில் ஒன்று சிவராம் பிறரை 'அள்ளி வைப்பதில்' வல்லவர் என்பது.

1. மாலைதீவுக்கு படையெடுத்துச்சென்ற தன்னுடைய சக தோழர்களான புளட் உறுப்பினர்கள் பற்றிய விபரங்களை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் 'அள்ளி வைத்தவர்' சிவராமே என்பதை சிவராமுடன் பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் படித்த இப்போது அமெரிக்காவின் மினசோட்டா பல்கலைக்கழக துணைப் பேராசிரியராக இருக்கும் கார்ட்றி இஸ்மாயில், லைன்ஸ் (www.lines-magazine.org) சஞ்சிகையில் எழுதிய 'Mourning Sivaram' என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். இதே 'அள்ளி வைப்பு' தகவலை பாரிஸ் ஈழமுரசுவில் 90களின் ஆரம்பத்தில் வெளிவந்த தொடரான 'காந்தி தேசத்தின் மறுபக்கம்' என்ற புளட் வரலாற்றைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரையிலும் காணலாம்.

2. முன்னைநாள் வீரகேசரி பத்திரிகையாளரான மட்டக் களப்பைச் சேர்ந்த நித்தி என்ற நித்தியானந்தனை (பின்னர் இவர் புலிகளில் இணைந்து ஒரு சமரின் போது இறந்து விட்டார்) புலி என்று புளட் மோகனிடம் காட்டிக் கொடுத்தது சிவராமே என்ற தகவலை நித்தியானந்தனே தனது நண்பரான இப்போது ஆஸ்திரேலியாவில் வாழும் நாகராஜா என்ற பத்திரிகையாளரிடம் தெரிவித்தை நாகராஜா சிவராமைப் பற்றி 'தேனீ' இணையத்தில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். இதன் காரணமாக புளட் மோகனால் சுடப்பட்ட நித்தியானந்தன் காயமடைந்தார் எனவும் பின்னர் நித்தி புலிகளில் இணைந்து கேணல் கருணாவின் நம்பிக்கைக்குரியவராக செயற்பட்ட காலத்தில் சிவராமால் கருணாவை நெருங்கவே முடியவில்லை என்பதையும் நித்தியின் மரணத்தின் பின்னரே சிவராமும் கருணாவும் நெருக்கமாயினர் என்றும் நித்தி, சிவராமை இந்திய உளவுப் பிரிவான ரோ வின் ஒற்றன் என்று தன்னிடம் கூறியதாகவும் நாகராஜா அதில் குறிப்பிட்டுள்ளார்.

நித்தி காட்டிக் கொடுக்கப்படுவதற்கு முன் சிவராம், டி. பி. எஸ் ஜெயராஜ், நித்தி ஆகிய மூவரும் பல தடவைகள் கொழும்பில் ஒன்றாகச் சந்தித்து மது அருந்திக் குலவியதை ஜெயராஜ் தன்னுடைய Sunday Leader கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். புளட் மோகன் புலிகளால் கொல்லப்பட்ட பின்னர் மோகன் பற்றி ஒரு நீண்ட செய்திக் கட்டுரையை சிவராம் தமிழ் நெற் இல் எழுதினார். அதில் நித்தியானந்தன் என்ற பத்திரிகையாளரை புளட் மோகன் கொல்ல முயற்சித்ததாகவும் எழுதினார். கொலையை ஏவிவிட்டது யார் என்ற உண்மையைச் சொல்ல மோகனும் நித்தியானந்தனும் உயிரோடு இல்லை.

3. சிவராமைப் பற்றி டி.பி.எஸ் ஜெயராஜ் எழுதிய நீண்ட கட்டுரையில் ஒரு கட்டத்தில் சிவராம் negative reputation ஐப் பெற்றதாகவும் இது தொடர்பாக தன்னுடைய நெருங்கிய நண்பர்கள் சிவராமோடு பழகுவதைத் தவிர்க்கு மாறு அறிவுறுத்தியதாகவும் அதற்கமைய தானும் அக்காலத் தில் சிவராமோடு நெருங்கிப் பழகவில்லை என்பதையும் ஜெயராஜ் எழுதுகிறார்.

விடுதலைப் புலிகளிலிருந்து கருணா தான் பிரியப் போவதாக அறிவித்த ஆரம்பத்தில் சிவராமும் கரிகாலன் மற்றும் ரமேஷ் ஆகியோரைப் போல கருணாவின் பக்கமே இருந்ததாக இப்போது பரவலாக நம்பப்படுகிறது. சிவராம் புளட்டிலிருந்த ஆரம்பகாலங்களில் இருந்தே கிழக்கு மாகாணத்தின் நலன்களிலும் முக்கியத்திலும் அக்கறை கொண்டிருந்தவாராக அறியப்பட்டவர். விடுதலைப் புலிகளும் இதனடிப்படையில் சிவராமே கருணாவைத் தூண்டி விட்டிருக்கலாம் என்று சந்தேகித்தனர். பிளவு ஏற்பட்டபோது கருணாவின் சார்பாக சிவராமே தங்களை முதலில் தொடர்பு கொண்டார் என்பதை தமிழ்க்கூட்டமைப்பிலுள்ள ஒரு அரசியல் கட்சியின் வட்டாரமொன்று தெரிவித்ததையும் கரிகாலனும் ரமேசும் வன்னித் தலைமைப் பக்கம் சென்ற போதே 'இனிக் கருணா நிலைக்க முடியாது' என்ற முடிவுக்கு சிவராம் வந்ததையும் UTHR (J) அறிக்கை குறிப்பிடுகிறது.

விடுதலைப் புலிகள் மிகச்சரியாகவே தன்மீது சந்தேகம் வைத்திருப்பது சிவராமுக்கு மிகத்தெளிவாகவே தெரிந்திருக் கும். இதற்கிடையில் கருணாவின் படைகள் கலைந்து போன பின்னர் சிவராமின் மைத்துனரான கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் விடுதலைப் புலிகளால், கருணா விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விசாரிக்கப் பட்டார். சிவராம் எப்படி தனது நலன்களுக்காக 1997 ல் தமிழ்நெற் தொடங்கியபோது தன்னுடைய புலி விமர்சனத் தைக் கைவிட்டு புலிச்சார்பு நிலை எடுக்கத் தலைப்பட்டாரோ அப்படி ஒரு நிலமை மீண்டும் சிவராமுக்கு ஏற்பட்டது. இம்முறை வன்னிச்சார்பு எடுக்கவேண்டிய நிலமை.

விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு அமைப்புக்களில் கிழக்கு மாகாணத்தவரின் செல்வாக்கு இல்லை. வட மாகாணத்தவரினது குறிப்பாக யாழ் அதிக்கமே. தமிழ் நெற்றின் ஆசிரியாராக தொடர்ந்தும் இருக்க வேண்டும், இலவசமாக உலகச் சுற்றுப் பயணங்களும் செய்ய வேண்டும் என்றால் புலிகளின் பக்கம் சாய்வதைத் தவிர சிவராமுக்கு வேறு வழியே இல்லை. கருணாவை மிகக் கடுமையாகக் கிண்டலடித்து கருணாவுக்கான ஒரு பகிரங்கக் கடிதத்தை வீரகேசரியில் எழுதினார். சிவராமின் பெருமள விலான கட்டுரைகளைப் போலவே அதுவும் ஒரு கட்டணம் செலுத்தாத விளம்பரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராம் தனது தனிப்பட்ட பாதுகாப்பில் கடந்த காலங்களில் மிகக் கவனமாகவே இருந்துள்ளார். 1986 ம் ஆண்டு ரெலோ இயக்கம் புலிகளால் அழிக்கப்பட்ட பின்னர் மற்றைய இயக்கங்களையும் அழிக்கத் தொடங்கினர். அடுத்ததாக புளட் மீது புலிகளால் யாழ் குடாநாட்டில் தாக்குதல் தொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட கடைசி நேரத்தில் புளட்டின் உறுப்பினர்களாக யாழ் நகரில் தங்கி இருந்தவர்கள் சிவராமும் மெண்டிஸ் என்கிறவருமே. இருவருமே நிலமையின் உக்கிரத்தைத் தணிக்கும் பொருட்டு ராஜதந்திரமான ஒரு நடவடிக்கையைச் செய்தனர். புளட் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தனது ராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வதாக ஒரு பத்திரிகை அறிக்கையை தயார் செய்து அதனை யாழ்ப்பாணத்தின் நான்கு பத்திரிகைகளிலும் வெளிவருமாறு செய்தனர். சிவராம் அத்துடன் நின்றுவிடாது விரைவிலேயே ஒரு படகில் தமிழ் நாட்டுக்குத் தப்பிச்சென்று விட்டார். மெண்டிஸ் கிட்டுவோடு நட்பு பாராட்டுகிறவர். கிட்டு மெண்டிஸின் உயிருக்கு உத்தரவாதம் வழங்கப்படும் என்று கூறியதை நம்பி யாழ்ப்பாணத்திலேயே மெண்டிஸ் தங்கியிருந்தார். எனினும் சிவராம் வெளியேறிய சில தினங்களிலேயே nkz b] ;Gypshy;'கைது செய்யப்பட்டு' சில நாட்களின் பின் கொல்லப்பட்டார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து புலிகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்தவென்று வாசுதேவா தலைமையிலான ஒரு குழு கிழக்கு மாகாணத்தில் புலிகளைச் சென்று சந்திக்கவிருந்தது. புலிகளை இதுதொடர்பாக வாசுதேவா நம்புவதை கடுமையாக எச்சரித்த சிவராம் தானும் அக்குழுவில் செல்வதைத் தவிர்த்தார். முடிவில் பேசவென்று அழைத்து வாசுதேவா முதலியோரை புலிகள் கொன்றது எலோருக்கும் தெரிந்ததே.

இவ்வகையாக தனது பாதுகாப்பு சம்பந்தமாக மிகச் சரியான மதிப்பீடுகளைச் செய்த சிவராம் தனது இறுதிக் காலத்தில் தனது பாதுகாப்பு சம்பந்தமாக மிக அசட்டையாக இருந்தது அதிசயமே. அதுவும் புளட்டின் உட்கட்சிப் படுகொலைகளின் இரத்தக்கறைகளை காவிக்கொண்டும் தனது சக புளட் உறுப்பினர்களுக்கு தொடர்ச்சியாக துரோகம் செய்துகொண்டும் கருணாவோடு கொழுவிக் கொண்டும் புலிகளின் உத்தியோகப் பற்று அற்ற பிரச்சாரச் செயலாளராக கொழும்பில் இயங்கிக் கொண்டும் இன்னமும் கொழும்பில் வைத்து ஒரு 'பத்திரிகையாளரான' தான் கொல்லப்படமாட்டேன் என்று சிறீ லங்காவின் ஜனநாயகம், நீதி, சட்டம், ஒழுங்கு என்பவற்றில் நம்பிக்கை வைத்து இருந்ததானது ஒரு முரண்நகையே.

சிவராமைப் பற்றி தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் அவர் ஒரு துப்பாக்கி தாங்கிய போர் வீரர் என்ற மாதிரியான பிரமைகளை கட்டமைத்துள்ளன. உண்மையில் சிவராம் ஒரு சமரில் (battle) கூட பங்குபற்றியதில்லை. அவரது துப்பாக்கியிலிருந்து வெளிவந்த குண்டுகள் யாரையாவது கொன்றது என்றால் அது அவரது சக புளட் இயக்கத் தோழர்களான அகிலனும் செல்வனுமே.

இணைபிரிந்த நண்பர்கள் சிவராம் - டிபிஎஸ் ஜெயராஜ்




மாமனிதர் விருது வழங்கப்பட்டதை அடுத்து தமிழ் பத்திரிகைகளில் பலர் சிவராமுக்கு அதிபுனையப்பட்ட அஞ்சலிக் கட்டுரைகளை போட்டிபோட்டுக்கொண்டு எழுதினர். அவர் ஒரு உன்னதமான பத்திரிகையாளராகவும் புத்திஜீவியாகவும் கட்டமைக்கப்பட்டார். இப்படி எழுதியவர்கள் விடுதலைப் புலிகளின் மனம் குளிர வைக்கும் ஊடகவியலாளர்கள். இவர்களில் பலர் சிவராமின் உண்மை வரலாற்றை அறிந்தவர்கள் என்பதுபோக கடந்த காலங்களில் சிவராமை கடுமையாக விமர்சித்தவர்கள். தெரிதல், காலச்சுவடு, உயிர்மை போன்ற இலக்கிய இதழ்களிலும் அஞ்சலிகள் வந்தன. இதைத் தொடர்ந்து ஆன்மீக மற்றும் சோதிட மாத இதழ்கள், மங்கையர் மஞ்சரி, அம்புலிமாமா என்பவற்றிலும் சிவராமுக்கு அஞ்சலிகள் வரலாம் என்று எதிர்பார்த்தேன்.

ராஜ்பால் அபேயநாயக்கா சிவராமை யேசு கிறிஸ்து அளவுக்கு ஆக்காத குறைதான். Sunday Times இல் வெளிவந்த சிவராமின் அஞ்சலிக் கூட்ட அழைப்பில் சிவராமின் 'விசிறிகள்' (Fans) எலோரும் வரலாம் என்று எழுதப்பட்டது. அவர் ஒரு சினிமா நட்சத்திரமாக உருவாக்கப்பட்டார். சிவராமின் அடிமுதல் நுனிவரை அறிந்த பத்திரிகையாளரான டி. பி. எஸ் ஜெயராஜே சிவராமின் மறுபக்கங்கள் பற்றி அடக்கி வாசித்தார். ஜெயராஜ் எழுதிய நீண்ட தொடரில் புனைவுகளே அதிகம் என்பதுபோக அதில் அதிகளவான தரவுப்பிழைகள் இடம் பெற்றன.

அகிலன், செல்வம் கொலையைப் பற்றி எழுதுகிற ஜெயராஜ், விசாரணையின் போது சிவராம் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டதாக புனைந்து பல்டி அடிக்கிறார். வேலிக்கு ஓணான் சாட்சி என்ற அடிப்படையில் நடத்தப்பட்ட புளட்டின் கங்காரு நீதிமன்றங்களில் ஜெயராஜுக்கு எப்போது உடன்பாடு வந்ததோ தெரியாது. தன்முயற்சியில் சற்றும் மனம் தளராத பேராசிரியர் சிவத்தம்பி, சிவராமை 'நீ எத்தகைய பெரிய மனிதன்' என்று எழுதினர்.

மாத்தையாவினாலும் கிட்டுவினாலும் நம்பகரமற்றவர் என்று மிகச்சரியாகவே மதிப்பிடப்பட்ட சிவராம் தனது குறுகிய கால வாழ்க்கையிலும் அதனை உறுதிப்படுத்திச் சென்றிருக்கிறார். ஆனால் அரசியல் காரணங்களுக்காக புலிகளால் மாமனிதர் பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்ட சிவராமின் இரத்தக்கறை படிந்த கொடூரக் கொலைகளின் குற்ற வரலாறு தற்போது வெளிச்சத்திற்கு வருகிறது. ❐


தேசம் வாசகர்களுக்கு எமது இனிய புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# Rengan N Devarajan

## SOLICITORS



**Immigration & Nationality**

**Employment**

**Landlord & Tenant**

**Housing**


**Welfare Benefits**

**Matrimonial**

**1st floor**
**128 Ilford lane**
**Essex IG1 2LE**

**Tel: 020 8478 5797**
**Fax: 020 8478 4486**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org